உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

# கர்நாடக யோகினிக்கதை.

## இரண்டாம் பாகம்.

இது

திரிசிரபுரம்

பிரஹ்மஸ்ரீ-திரு-அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்

ஜேஷ்ட புத்திரி

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்

இயற்றியது.


...ப்பிரமண்யம் கம்பெனி,

... டீ. ஒ., சென்னை.

...917.



0-,3MBD', K
M17. 2
171406


[விலை அணு 5.

PRINTED AT THE
Sacchidhanandha Press,
Komaleeswaranpet, Madras.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

# கர்நாடக யோகினிக்கதை.

## இரண்டாம் பாகம்.

### ஓடுகிற தண்ணீருந் தித்தித்துக் காசுக்குக் கல அரிசி விற்ற கதை.

பொன்னெடுமுத்தும், புதுமலர்த்திரளும், சந்தனத்துளியும் அலைக்கரங்களினால் கரைதொறுஞ் சொரிந்தொழுகும் காவிரிசூழ்ந்த சோழநாட்டில் மதிவிலாசன் என்ற அரசிளங் குமரன் செங்கோல் செலுத்திவரும் நாளில், பாண்டியநாட்டு ராஜகுமாரத்தி பங்கயச்செல்வியை மணம்புரிந்து கொண்டான். அதற்குமுன்னாலேயே அவன் ஒரு தாசியை நேசித்துவந்தான். இவன் விவாகஞ் செய்துகொண்டதைக் கேட்டுத், தாசி அரசனுக்கு மருந்திட்டு வசம்பண்ணிக் கொண்டாள். அதனால் அரசன் தன்மனைவி வீட்டுக்கு வந்ததுமுதல் அவளோடு பேசுகிறதில்லை. கண்ணெடுத்து அவள் முகத்தைப் பார்ப்பதுமில்லை. உண்கிறசமையத்தில் அந்தப்புரம் வருவான்; தலைநிமிர்ந்து பாராமல் புசித்துவிட்டு வெளியே போய்விடுவான்.

இவ்வாறுக இருப்பதைப் பங்கயச் செல்வி சகியாமல் மனம் பதைத்துத் தன்னுல் ஆனமட்டும் பிரயாசப்பட்டாள். அவனைத்திருப்பமுடியவில்லை. பின் அவள் ஒரு யுக்தி கண்டுபிடித்தாள். அதாவது கணவனுக்குச் செய்யவேண்டிய சகல பணிவிடைகளையும் வேலைக்காரர்களைச் செய்யச் சொல்லாமல் தானே செய்து முடித்து வந்தால், அப்பொழுது அரசன் தன்னேடு பேச நேரிடும். எப்படியாவது தன்னெண்ணத்தை அப்பொழுது நிறைவேற்றிக் கொள்ளலாமென்று தீர்மானித்துக்கொண்டு அன்று முதல் வேலைக்காரர்களை வேலைசெய்யச் சொல்லாமல் சகலபணிவிடைகளையுந் தானே செய்துவந்தாள்; என்னசெய்தும் அவன் பேசுவதில்லை; அப்பால் ஸ்நானஞ் செய்யும்பொருட்டு அரசனுக்கு மணைபோட்டு அதில் உட்காரவைத்துத், தன் கையாலேயே எண்ணெய் தேய்த்து ஸ்நாணம்பண்ணி வைத்தாள். அப்பொழுதும் அரசன் பொம்மையைப் போல அசையாமல் உட்கார்ந்துகொண் டிருந்தானேயன்றி வாய்திறந்து பேசவில்லை. பிறகு அவள் தன் கையாலேயே சமையல் செய்து தானே அன்னம் படைத்தாள்; அதிலும் அவன் பேசவில்லை. ஒருநாள் உப்பில்லாமலும், ஒருநாள் புளியில்லாமலும், வாய்க்கு உருசியில்லாதபடி சமைத்துப் போட்டாள். அப்பொழுதும் அவன் வாய்திறந்து பேசாமல் புசித்துப் போய்விட்டான். பிறகு அவள், பக்கத்தில் ஒருவேலைக்காரரும் வராதபடி தடுத்துத் தான் மாத்திரம் தனித்திருந்து பணிவிடைகளைச் செய்துவந்தாள். அப்பொழுதும் அவன் பேசவில்லை. இரவில் அரசன் போஜனஞ் செய்து விட்டுக் கைகால் சுத்திசெய்து கொள்ளுவதற்

குச் செம்பில் தண்ணீரை யெடுத்துக் கொண்டுபோய்ச் சுத்தி செய்துகொண்டதும், அந்தப் பாத்திரத்தை அங்கேயே வைத்துவிட்டு வெளியே போய்விடுவான். ஒருநாள் இராத்திரி அரசன் புசித்துக் கைகால் சுத்தி செய்துகொள்ளப் போகும்போது, பங்கயச்செல்வி முன்னாலேபோய் வாசற்படியில் நின்று அவனை வெளி யிற் போகவிடாமல் வழியை மறித்துக்கொண்டு, "நீர் என்னோடு ஏன் பேசவில்லை? நான் என்ன தப்பிதஞ் செய்தேன்? என்னோடு சாதாரணமாய்ப் பேசிக்கொண் டிருக்கக்கூடாதோ? என்னோடு பேசாதிருப்பதற்குக் காரணமென்ன? நான் என்னசெய்தால் பேசுவீர்?" என்று கேட்டாள். அரசன் கொஞ்சநேரம் வாய்திறவா மல் தலைகுனிந்துகொண்டுநின்றுபிறகு, "ஓடுகிறதண்ணீருந் தித்தித்துக், காசுக்குக் கல அரிசி விற்றால் அப்போது உன்னோடு பேசுவேன். அதுவரைக்கும் உன்னோடு பேச மாட்டேன்" என்றான். அரசி, "அப்படியானால் நானிங்கிருப்பதில் பிரயோசனமென்ன?" என்றாள். அரசன், "யாதொரு பிரயோசனமுமில்லை. இஷ்டமிருந் தால் உன் தகப்பன் வீடுபோய்ச் சேரலாம்" என்றான். அரசி மனம் வருந்தி "நான் என் தகப்பன் வீட்டுக் குப்போக உத்தரவு கொடும்" என்றாள். அவன் "வேண்டிய திரவியங்களை யெடுத்துக்கொண்டு சுக மாய்ப்போ" என்று உத்தரவு கொடுத்துப் போய்விட் டான்.

பங்கயச்செல்வி, தீராத் துக்கம் உடையவளாய் இராமுழுதும் யோசித்துத் தகப்பன் வீட்டுக்குப்போக மனமில்லாமல் "எங்காவது வனங்களுக்குப் போய்ப் பிராணனை விட்டுவிடுவதே தகுதி; கணவனில்லாத

மனைவி உயிரில்லாத உடம்புபோல எல்லாராலும் வெறுக்கப்படுவதால் நான்உயிரோடிருந்து என்னசெய்வது. தகப்பன் வீடுபோனாலும் அவமானமேயொழியப் பெருமை சிறிதுமில்லை. ஆதலால் வனத்துக்குப் போய்த் துஷ்ட மிருகங்களுக்கு இரையாய் ஒழிவதே தகுதியென்று தீர்மானித்துக்கொண்டு, மறுநாள் விடியுமுன், ஒருவருடனும் சொல்லாமல் ஆண் வேஷம் தரித்து, ஒரு குதிரைமேலேறிக்கொண்டு, அது போன திக்கிலேயே நடத்திக்கொண்டு போனாள். இரண்டு மூன்றுநாள் அன்னபானாதிகளும் இல்லாமல் பசியால் வருந்தி வெயிலால் வதங்கிக் களைத்து ஒரு மலையடிவாரத்தில் குதிரையை விட்டிறங்கி அதை மரத்தடியில் கட்டிக் கொஞ்சம் புல் பிடுங்கிப் போட்டுப் பக்கத்திலோடும் அருவியில் இரண்டு கைத் தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டு ஒரு மாத்தடியில் படுத்து நித்திரை போய்விட்டாள்.

பிறகு விழித்துக்கொண்டு பார்க்கும்போது குதிரையைக் காணமல் சற்றுத் தூரம்போக அங்கே குதிரையின் எலும்புக் கூடுமாத்திரம் இருந்தது. அதைப் பார்த்து வயிறெரிந்து, "ஐயோ! தெய்வமே இந்தக் குதிரையைத் தின்றது, சிங்கம் புலி முதலிய துஷ்ட மிருகங்களோ! வனதேவதையோ! பேய் பூதங்களோ! இதைத்தின்ற பிராணி என்னையுந் தின்று பசியாறியிருந்தால் நான் மிகச்சந்தோஷமாயிருப்பேனே! சுகப்பட்டிருப்பேனே! இன்னம் உலகத்தில் நான் கஷ்டப்படுவதற்காகவோ என்னை விட்டுவிட்டுக் குதிரையை மாத்திரந் தின்றுபோய்விட்டது எந்தப் பிராணியோ! என் மாமிசமும் சதையும் அவற்றின் வாய்க்கு ருசி

யாதோ? மகா பாபியாய்விட்டேனே! மிருகங்களும் பேய் பூத பைசாசங்களுங் கூடத் தின்ன விரும்பாத இந்தச் சரீரம் என் கணவனுக்கு மாத்திரம் எப்படி யினிமையா யிருக்கும்? இனி நானிருந்து என்ன பயன்? என் குதிரையைத் தின்ற மிருகங்களே! பூதங்களே! வனதேவதைகளே! என்னையுந் தின்று திருப்தி யடைந்துவிடுங்கள்" என்று மரமட்டை கல்லுங் கசிந் துருகப் புலம்பி யழுதாள்.

அப்போது அந்தமரத்தின்மேல் வசித்துக்கொண் டிருந்த ஒரு பூதம் அவள்மேல் இரக்கங்கொண்டு, அவள் எதிரில் ஒரு மனிதனைப்போல் நின்றுகொண்டு கீழே யிறங்கிவந்து "பெண்ணே! நீ யார்? பூதங்கள் சஞ்சரிக்கும் இந்தவனத்துக்கு ஏன்வந்தாய்? இவ்விடத் தில் உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது" என்று கேட் டது. அவள் "நான் சோழராஜன்மனைவி; அவர் என்னை வெறுத்து ஒதுக்கிவிட்டு மதிமயங்கி என்னை என் தகப் பன் வீடுபோய்ச் சேரும்படி அனுப்பிவிட்டார். நான் தகப்பன் வீடுபோக இஷ்டமில்லாமல், வனத்தில் பேய் பூதங்களுக்காவது, துஷ்ட மிருகங்களுக்காவது இரை யாகி மடியலாமென்று வந்தேன். எதுவோ என் குதி ரையை மாத்திரந் தின்றுவிட்டது; என்னைத் தவிக்க விட்டது. அதனாலே நான் புலம்புகிறேன்" என்றாள்.

பூதம் மனமிரங்கிப் "பெண்ணே! நீ பயப்ப டாதே! நான் பூதராஜன். இந்த வனத்துக்குப் பூத வனமென்று பேர். இதில் மனிதர்கள் வருவதில்லை. நீ எப்படியோ வந்துவிட்டாய். பசியா யிருந்தமையால் உன் குதிரையை நான் தின்றுவிட்டேன். உனக்கு நல்ல உபகாரஞ் செய்கின்றேன். இந்தா, இந்த வஸ்தி

ரத்தை உடுத்துக்கொள். உன்னைப் பார்த்தால் ஆணு கவே தோன்றும். உனக்குப் பசிதாக வருத்தம் நேரி டாது. ஒரு வருஷத்துக்குள் நீ மலைய நாட்டுக்கு அரசனுவாய்; அப்பொழுது நான் வந்து உனக்கு வேண்டிய தந்திரோபாயங்கள் சொல்லுகிறேன். ஏழா வது வருஷம் உன் கணவன் ஏழையாய் மெலிந்து உன் னிடம் வந்துசேர்வான். பின் நீ சுகப்படுவாய். ஆபத்து வந்தபோதெல்லாம் என்னை நினை. நான் வந்து உன் துன்பத்தைத் தீர்த்துப் போகிறேன்" என்று கூறி அனுப்பிற்று.

பங்கயச்செல்வி இதையும் ஒரு தரம் பார்ப்போ மென்று கருதிச் சம்மதித்தாள்; பூதங்கொடுத்த வஸ் திரத்தை யுடுத்துக்கொண்டாள். அவளுக்கு ஆணுருவ முண்டாயிற்று. அவள் மனமகிழ்ந்து பூதத்தின் வார்த் தையில் நம்பிக்கை கொண்டாள்; பிறகு பூதத்தி னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு காடு முழுதுஞ் சுற்றித் திரிந்தாள். கொடிய சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களும் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களும் அவ ளைக் கண்டதும் பயந்து ஓடிப்போயின. அவளுக்குப் பசி தாகம் ஒன்றுந் தோன்றவில்லை. பூதம் சொன்னது நிஜந்தான் என்று மகிழ்ந்து தன்னிஷ்டம்போலச் சுற்றித் திரிந்தாள்; தன் வழிபடு கடவுளை முப்பொ ழுதும் பணிந்துவந்தாள்; ஆங்காங்குக்கிடைக்கும் கனி வர்க்கங்களை மனதுக்கிசைந்தபடி புசித்துத் தவசிக ளைப்போல வனவாசம் பண்ணிவந்தாள். ஒரு வருஷ மானதும் மலையமாநாட்டி னருகிலிருக்கும் வனத்தை யடைந்தாள்; அங்கு ஒரு குடிசை போட்டுக்கொண்டு அதில் வசித்தாள்.

அந்தவனத்தில் வசிக்கையில், மலையநாட்டு வேந்தனாகிய சந்திரவர்மமஹாராஜன் இறந்துபோனான். அவனுக்குச் சந்ததியில்லை. மந்திரிமார்கள் அவனுக்குச் செய்யவேண்டிய அபரக்கிரியைகளைச் செய்து முடித்துப்பின் பட்டங்கட்டுவதைக்குறித்து யோசித்தார்கள். அப்போது அரசனுடைய தாயாதிமார்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கே அந்தப்பட்டம் வேண்டுமென்று போராடத் தொடங்கினார்கள். மந்திரிமார்கள் அவர்களை சச்சரவு செய்யாதபடி சமாதானஞ் செய்து, அவர்களை நோக்கி "நமது தேசவழக்கப்படி பட்டத்து யானையை அலங்கரித்து வெளியே விடுவோம்; அது யாரை வணங்குகிறதோ அவனே பட்டத்துக்கு வரவேண்டும்" என்று சொல்ல, யாவரும் ஒப்புக்கொண்டார்கள்.

அப்படியே பட்டத்துயானையை அலங்கரித்து அதன்கையில் ஒரு பூமாலையைக்கொடுத்து வெளியே விட்டார்கள். அது ஒருவரையும் லட்சியம் பண்ணாமல், மகா வேகத்தோடு நடந்து வனத்தை நோக்கிச் சென்றது. மந்திரி பிரதானிகளும் அதைப் பின்தொடர்ந்து போனார்கள். அந்தயானை சமீபத்திலிருக்கிற வனத்துட் சென்று அங்கே குடிசையில் தவசு பண்ணிக் கொண்டிருக்கிற பங்கயச் செல்வியிடம் போய் வணங்கித் தன் துதிக்கையிலிருக்கிற பூவை அவள் கழுத்திலிட்டு நின்றது. அப்பொழுது பங்கயச்செல்வி அந்தயானையைக் கண்ணெடுத்துப் பார்த்தாள். அந்த யானையின் பிடரியில் அவளைக் காப்பாற்றிய பூதம் உட்கார்ந்துகொண்டு அவளை நோக்கி "நீ இப்பொழுது இந்த யானையின்மேலேறிக்

கொண்டுபோய்ப் பட்டங்கட்டிக்கொள்; உனக்குவேண்டிய புத்திமதிகளை நான் உனக்கு அப்போதைக்கப்போது சொல்லிக் கொடுக்கிறேன்'' என்று சொல்லி மறைந்து போயிற்று. உடனே மந்திரியார்கள் அவளை வணங்கி யானைமேல் ஏற்றி அரசர்க்குரிய மரியாதையோடு அழைத்துக்கொண்டுபோய்ப் பட்டங்கட்டினார்கள்.

அவள் அன்றுமுதல் அரசாளத்தொடங்கி, வெகு நீதியாகக் குடிகளைப் பரிபாலித்துவந்தாள். மந்திரிபிரதானிகளும், நாட்டுப் பிரஜைகளுடம் அவளைத் தந்தையைப்போல நேசித்தார்கள். உடனே பூதம்வந்து அவளைநோக்கி ''இன்னம் மூன்று வருஷம் இராஜ்யம் சுபிக்ஷமாயிருக்கும். தானிய தவசங்கள் சமிர்த்தியாயிருக்கும். ஆதலால் நீ, இந்தநாட்டில் விளையும் விளைவில் குடிகளுக்கு வேண்டியதுபோக மற்றதையெல்லாம் வாங்கிச் சேர்த்துக் கட்டிவை. ஏராளமான திரவியச் செலவு செய்து அந்நிய நாட்டிலிருந்து தானிய தவசங்களை வாங்கிச்சேர்த்துவை. பிறகு நானுனக்கு நடக்க வேண்டியதைச் சொல்லுகிறேன். உன் நகரத்தைச்சூழ வாய்க்கால் வெட்டி அதில் ஒழியாமல் நீரோடும்படிசெய். அதன்கரையில் நெல்லி விருட்சங்களை ஏராளமாய்ப்பயிர்செய்து பெரியவனமாக்கிவிடு. எங்கே பார்த்தாலும் அன்னசத்திரங் கட்டிவை. அவற்றில் வந்தவர்கள் எல்லாருக்குந் தடையில்லாமல் அன்னம்படை. இதோ இருக்கிற அரிசி மூட்டையைப் பூசைசெய்து திறந்து அரிசி எடுத்தால் அது குறையாமல் வளர்ந்துகொண்டிருக்கும். உன்னிஷ்டம்போலக் காசுக்குக் கல அரிசி விற்கலாம். இப்பொழுது நீ

புறப்பட்டு நான்குவருஷமாயிற்று. இன்னம் மூன்று வருஷத்தில் உன் புருஷன் இங்கே வந்து சேர்வான். நீயும் உன் கணவனும் வாசற்படியிலிருந்து சம்பாஷணை செய்துகொண்டிருந்த பாவனைபோல ஒரு படம் எழுதி என் கையில் கொடு. அதுபோல் பல படங்களை நானெழுதித் தருகின்றேன். அந்தப் படங்கள் உயிருள்ளனபோலவே யிருக்கும். அந்தப் படங்களை அன்னசத்திரங்கள் தோறும் கட்டி வை. அவைகளைப் பார்த்து எவன் அழுவானோ அவன்தான் உன் கணவனென்று தெரிந்துகொள். அவனைச் சிறை செய்து என்னை நினை. நான் வந்து நடக்கவேண்டியவற்றிற்கு யுக்தி சொல்லுகிறேன். அடுத்த வருஷமே கொடிய பஞ்சந் தொடங்கும். அப்பொழுது முன் பின் யோசித்துப் பாராமல் அன்னதான தருமஞ்செய். சத்திரத்தில் புசியாதவர்களுக்கு அரிசி உப்பு புளி முதலிய உலுப்பை தினந்தோறும்கொடு. நான்கு ஜாதியாருக்கும் தனித்தனியே ஜாகைகள் ஏற்பாடு செய்துவை. ஏழைகளாய் வந்தவர்களுக்கெல்லாம் அதில் தங்க இடங்கொடு. மூன்றும் வருஷ முடிவில் உன் புருஷன் சத்துருவால் ஜயிக்கப்படுவான்; அப்பொழுது பராரியாய் அலைந்து திரிவான்; கடைசியாக என் மாயையால் இவ்விடம் வருவான். அப்பொழுது ஓடுகிற தண்ணீர் தித்திக்கும். காசுக்குக் கல அரிசி விற்கும். அதையும் இந்தப் படங்களையும் கண்டு அவன் அழுவான் அதைக் கண்டு அவனைப் பிடித்துக்கொள். ஜாக்கிரதையாயிரு. நீதிசெலுத்தும்போது என்னைக் கருதி யுட்காரு. அப்பொழுது எல்லாருடைய மனக்கருத்தும் உனக்குத் தெரியும். பட்சபாதக மில்லாமல் நீதி செலுத்து. பிரஜைகளெல்லோரும் உன்னை நேசிப்

பார்கள். நீயும் உன் கணவனும் சக்கிரேசுவரார்களாக உலக முழுமையும் ஆளுவீர்கள்" என்று கூறிப் போய்விட்டது.

பங்கயச்செல்வி மகிழ்ந்து பூதஞ்சொன்னபடி யெல்லாம் செய்துவிட்டு, நீதிதவருமல் அரசுபுரிந்து வந்தாள். தன் கணவன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்துக்கொண்டு தெய்வத்தை மறவாமல் தியானித்துச் சிந்தித்துவந்தாள். இவளுடைய நீதியான அரசாட்சியையும், வாதிபிரதிவாதிகளின் மனக்கருத்திலுள்ளதை உள்ளபடி யறிந்துகொண்டு நிக்கிரக அநுக்கிரகம் செய்வதையும் கண்டு, பிரஜைகளெல்லாரும் இவளைத் தெய்வத்தன்மை யுள்ளவளென்றும், இந்த அரசன் தங்களுக்குக் கிடைத்தது தெய்வாநுக்கிரகமே யென்றும், இதுவரையிலும் இப்படிப்பட்ட அரசன் உண்டென்று கேள்விப்பட்டதே யில்லை யென்றும் கருதிப், பயபக்தி விசுவாசத்துடன் அரசனுக்கு அடங்கி நடந்துவந்தார்கள்.

மூன்ரும் வருஷம் தொடங்கிற்று. பாண்டிநாட்டரசன் இப்பொழுதுதான், சோழராஜன் தன்மகளை அவமரியாதைசெய்து சிறையிட்டு வேசிவீடே கதியாய்க்கிடந்தானென்றும், பிறகு அவளை வீட்டைவிட்டு ஓட்டிவிட்டானென்றுங் கேள்விப்பட்டு, சோழன்மேல் மஹா உக்கிரமான கோபங்கொண்டு அவனைக்கொன்று பழிதீரக்கருதினன். மந்திரிமார்கள் மருமகனேடு பகைபாராட்டி யுத்தஞ்செய்வது நியாயமல்ல வென்று, சொல்லித் தடுத்ததனல் யுத்தஞ்செய்வதைவிட்டு எப்படியாவது சோழனைத் தண்டித்துப் பழிதீர்க்கவேண்டுமென்று கருதிச் சமையம் பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கச் சோழநாட்டில் ஒரு சிற்றரச னுண்டு; அவனுக்கும் சோழனுக்கும் நிலச்சம்பந்த மாகச் சச்சரவு நேரிட்டது. பாண்டியன் சிற்றரச னுக்கு இரகசியமாக வேண்டிய உதவிகளைச் செய்து தன் படைகளையும் அவனுக்குச் சகாயமாக அனுப் பினுன். இதையறிந்த சோழன் முன் பின் யோசித் துப் பாராமல் பாண்டியனுக்குத் தன் சீமைக்குச் சமீபமாயிருந்த சொந்த பூமிகளையெல்லாம் கைப்பற் றிக்கொண்டு சிற்றரசனைத் தோற்க அடித்துத் துரத்தினுன். இதனுல் பாண்டியனுக்கும் சோழ னுக்கும் பகிரங்கமான போர் மூண்டது. பிரபலமான பயங்கர யுத்தந் தொடங்கியது. அதில் சோழன் தோல்வியடைந்து, நாட்டைவிட்டு வனத்துக்கு ஓடிப் போனுன். பாண்டியன் சோழராஜ்யத்தைத் தன் சீமையோடு சேர்த்துக் கொண்டான்.

ஓடிப்போன சோழன் காட்டில் அலைந்து திரிந்து படாதபாடுபட்டுக் கடைசியாகப் பூதவனம் வந்து சேர்ந்து களைத்து வருந்திக்கிடந்தான். அப்பொழுது பூதம் ஒரு மனிதவடிவாக அவனிடத்தில் வந்து உட் கார்ந்து பேசிக்கொண்டிருந்தது. பின் தான் வைத்தி ருந்த தின்பண்டங்களில் அவனுக்குக் கொஞ்சங் கொடுத்துத் தானுந் தின்றுகொண்டிருந்தது. அவன் களையாறிய பின், அவனை நோக்கி "நீ யார்? எங்கே போகிருய்" என்று கேட்டது. அவன் தன் வரலாறு முற்றுஞ் சொல்லிப் புலம்பினுன். பிறகு பூதத்தை நோக்கி "நீ எங்கே போகிருய்?" என்று கேட்டான். அது "நான் பஞ்சத்தினுல் வருந்திச் சோற்றுக்காக மலைய நாட்டுக்குப் போகின்றேன். அந்த நாட்டு அர சன் பஞ்சத்தில் களைத்து வந்தவர்கள் எல்லாரையும்

ஆதரிக்கிறுனென்று கேள்விப்பட்டேன். அங்கே போய்ச் சிறிது காலம் கழிக்க உத்தேசித்துப் போகிறேன். நீரும் வந்தால் அவ்விடத்தில் பஞ்சகாலத்தைக் கழித்து அதன் பின் ஆகவேண்டியவற்றிற்கு யோசித்துக்கொள்ளலாம்'' என்றது. வேறுவழியில்லாமையால் சோழன் ஒத்துக்கொண்டு அதன் பின் நடந்தான்.

இருவரும் வெகு தூரம் நடந்து வெயிலால் வருந்தித் தாகத்தினுலே தவித்து மலைய நாட்டையடைந்து நெல்லித் தோப்பில் வந்து உட்கார்ந்தார்கள். சோழன் தாகக் களையால் அந்தத் தோப்பில் உதிர்ந்து கிடக்கும் சில நெல்லிப்பழங்களைத் தின்று ஒரு கைத் தண்ணீரை யள்ளிக் குடித்தான்; அது கற்கண்டுபோலத் தித்திக்கக்கண்டு மனமயங்கிக் களைத்துச் சித்தப்பிரமைகொண்டவன்போலச் சற்று நின்று "ஆ! இதென்ன ஆச்சரியம்! ஓடுகிற தண்ணீர் தித்திக்கின்றதே! நான் என் கண்மணியான மனைவிக்கு, 'ஓடுகிற தண்ணீருந் தித்தித்துக் காசுக்குக் கல அரிசி விற்றால் உன்னோடு பேசுவேன்' என்று சொன்னேனே! அப்படியே இருக்கிறதே!'' என்று நினைத்துக்கொண்டு மனமுருகினுன். மாசுமறுவில்லாத மாணிக்கமணியாகிய என் மனைவியை நான் அநியாயமாகச் சிறைசெய்ததுந் தவிர வீட்டைவிட்டுப் போகும்படியும் துணிந்து சொன்னேனே! அவளுக்கு நான் செய்த அநியாயத்தைத் தெய்வம் பொறுக்காமல் தான் எனக்கு இந்தத் தண்டனைசெய்தது. குற்றமில்லாத மனைவியைக் கைவிட்டவனுக்கு இந்தக் கதி வருமென்று சாஸ்திரங்கள் சொல்வது சரியாகத்தானிருக்கிறது. வேசி நேசம் எத்தனை நாள் நிலைத்திருக்கும்! இப்பொழுது வெளியா

யிற்றே! என்னசெய்வேன்! என்மனைவியிருந்தால்இந்த ஆபத்துக்காலத்தில் கைவிட்டிருப்பாளோ? கண்ணை இமை காப்பதுபோலக் காத்துப் போஷிக்க மாட்டாளோ?—'' என்று பலவாறு சிந்தித்துக் கொண்டு மெய்ம்மறந்து போனான்.

அப்பொழுது பூதம் அவனை யறியாமலெழுந்து போய்விட்டது. பிறகு அரசன் தன் ஞாபகம்வந்து திரும்பிப்பார்க்கப் பக்கத்திலிருந்த மனிதனைக் காணாமல் இனியென்ன செய்யலாமென்று யோசித்து ஆவதாகட்டுமென்று நினைத்து அவ்விடம் விட்டெழுந்து புறப்பட்டு நகரத்தில் நுழைந்தான். அவ்விடத்தில் காசுக்குக் கலஅரிசி விற்பதைக்கண்டு மனமும் உயிரும் பதைத்துச் சோர்ந்து விழுந்தான். பிறகு தன்னைத் தானே தேற்றிக்கொண்டு "இதென்ன மகா விந்தையாயிருக்கிறது? காசுக்குக் கல அரிசி எந்தக்காலத்திலும் விற்றதுமில்லை; விற்றதென்று கேள்விப்பட்டதுமில்லை. இந்தக் கொடிய பஞ்சகாலத்தில் காசுக்குக் கல அரிசி விற்பதெப்படி? நாம் நமது மனைவிக்குக் கூறியதுபோல ஓடுகிறதண்ணீருந் தித்தித்தது. காசுக்குக் கலஅரிசியும் விற்கிறது. இன்னம் பார்ப்போம்'' என்று அன்ன சத்திரத்தில் நுழைந்தான்; வாசற்படியில் ஒரு படமிருக்கக் கண்டான். அதை உற்றுப்பார்க்க, வாசற்படியில் தன்மனைவி தன்னை வழிமறித்துக்கொண்டு பேசுகிற பாவனையாகச் சித்திரமெழுதியிருந்ததைப்பார்த்து மதிமயங்கித் துக்கத்தை யடக்கமுடியாமல் கண்களில் நீர் ததும்ப நின்றான். உள்ளேயிருந்து ஒருவன்வந்து "என் இங்கேநிற்கிறீர்? உள்ளேபோய் போஜனம் பண்ணுங்கள்'' என்று சொன்னான். அவனுக்குப் பதில் சொல்ல வாயெழாமல் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு

வேறொரு சத்திரம் போனான். அங்கும் அந்தப் படமிருந்தது. இவ்வாறே அவன் போன சத்திரங்க டோறும் படமிருக்கக்கண்டு கடைசியாக ராஜமாளி கையினருகிலிருந்த சத்திரம் போனான். அவ்விடத் திலும் அதே படமிருந்தது. அன்றியும், பங்கயச் செல்வி தனியாகச்சிறையிலிருந்தது, துக்கமுகத்துடன் மற்றொரு படத்தில் எழுதிக் கட்டப்பட்டிருந்தது. அவ்விரண்டையும் பார்த்துத் துக்கத்தையடக்க முடி யாமல் வாய்விட்டலறி யழுதான்.

உடனே அங்கிருந்த காவலர்கள் அவனைப் பிடித் துச் சிறைசெய்தார்கள். இந்தச் சமாசாரம் அரசனுக்கு அறிவித்தபோது, அரசன் அந்தக் குற்றவாளியை அழைத்துக் கொண்டுவரக் கட்டளையிட்டுப்பார்க்க, அவன் தன் கணவன்தானென்று தெரிந்துகொண்டு, அவனைப் பார்த்து, "நீ அந்தப் படங்களைப் பார்த்து ஏன் அழுதாய்?" என்றான். அவன் ஒன்றுஞ் சொல்ல வாயெழாமல் விம்மி விம்மி அழுதான். பலதரங் கேட்டும் பதில் சொல்லாமையால் அரசன் காவலரை நோக்கி இவனைக்கொண்டுபோய்ச் சிறையில் அடைத்து விடுங்கள். நாளையதினம் காலமே கொண்டு வாருங் கள்" என்று கட்டளை யிட்டான். காவலர் கொண்டு போய்ச் சிறைச்சாலையில் அடைத்தார்கள். அரசன் பெரிய காவலாளியைத் தனியாக அழைத்து, "இந்தக் குற்றவாளியை அலட்சியம் பண்ணாமல், இவனுக்கு அன்னபானாதிகள் உதவி உபசரியுங்கள்" என்று சொல்லி யனுப்பினான்.

பங்கயச்செல்வி இரவில் பூதத்தை நினைக்க அது எதிரே நின்றது. அதை நோக்கி "நீ சொன்ன

படியே என் கணவன் வந்திருக்கின்ருன். இனிச்செய்ய வேண்டியதென்ன?" என்று கேட்டாள். அது, "இனி உனக்கு நல்லகாலந்தான். அவனை ஒரு மாதம் சிறையில் வைத்துப் பின்பு அவனுக்கு உன்னைத் தெரிவித்து அவனேடிருந்து வாழ். நான் வந்து அவனுக்குப் பட்டங் கட்டுவிக்கிறேன். அது வரையில் நீ எல்லோருடைய கண்ணுக்கும் ஆண் வடிவமாகவேயிரு" என்று கட்டளையிட்டுச் சென்றது. அவ்வாறே குற்றவாளி மறுநாள் ராஜ சபைக்குக் கொண்டு வரப்பட்டபொழுது, அரசன் அவனை நோக்கி "நீ உள்ளதைச் சொன்னல் உன்னை விடுதலைசெய்து வெகுமதி தருவேன். இல்லாவிட்டால்தண்டிப்பேன்" என்று உறுக்கிக் கேட்க, குற்றவாளி "மகாராஜாவே அந்தப் படத்தில் எழுதியிருக்கும் அரச குமாரத்தி என் மனைவியைப்போலிருக்கிருள். அரசன் என்னைப்போலிருக்கிருன். நான் என் மனைவியை அலட்சியம் செய்து அவளோடு பேசாமலிருந்துவிட்டேன். ஒரு நாள் நான் வெளியிற் போகும்போது அவள் வாசற்படியில் வந்து, என்னை வழிமறித்துக்கொண்டு, 'நீ யேன் என்னேடு பேசுகிறதில்லை? நான் என்ன செய்தால் என்னேடு பேசுவீர்' என்று கேட்டாள். 'ஓடுகிற தண்ணீருந் தித்தித்துக், காசுக்குக் கல அரிசியும் விற்ருல் அன்று உன்னேடு பேசுவேன்' என்று, முட்டாள்தனமாகச் சொன்னேன். அப்புறம் அவள்போன இடந் தெரியாது. அப்பொழுது நாங்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டு நின்ற பாவனையாக இந்தப் படம் எழுதப்பட்டிருக்கிறது. அதுவுந் தவிர நான் சொன்னபடி ஓடுகிற தண்ணீருந் தித்தித்தது. காசுக்குக் கல அரிசியும் விற்கிறது. அவளுடைய படத்தை

யுங் கண்டேன். அதனால் விசனம் பொறுக்க முடியாமல் அழுதேன்" என்றான். சபையாரெல்லாருங் கலீரென்று நகைத்தார்கள்! அரசன் "இவன் சுத்தப் பைத்தியக்காரன்போ லிருக்கிறான். இவனை ஒரு மாதம் சிறைச்சாலையில் வைத்துப் பின்பு கொண்டுவாருங்கள்" என்று அனுப்பிவிட்டான்; பின் பெரிய காவலாளியை அழைத்து, "இந்தக் குற்றவாளிக்கு ராஜ போஜனமளித்து, எனக்கு உபசரிப்பதுபோல் உபசாரஞ் செய்து பாதுகாத்து வாருங்கள். இவன் ஏதோ ஒரு தேசத்து அரசன்போலிருக்கிறது ஜாக்கிரதை" என்று சொல்லி யனுப்பினான். அவர்கள் அவனைக் கொண்டு போய் அரசன் கட்டளைப்படி உபசரித்துப் போஷித்து வந்தார்கள்.

ஒருமாதம் ஆனவுடனே பங்கயச்செல்வி குற்றவாளியைத்தன் முன் கொண்டு வரச்செய்து "நீ எந்தவூர்! இங்கேன் வந்தாய்?உள்ளது சொல்"என்றுகேட்க, அவன் சொல்ல வெட்கி, "ஓலையில் எழுதிக்கொடுக்கிறேன்; பார்த்துக் கொள்ளுங்கள்; எனக்குச் சொல்ல வாயெழவில்லை" என்றான். அப்படியே ஓலையும் எழுத்தாணியும் கொண்டுவரச்சொல்லி அவன் கையில் கொடுத்தாள். அவன் தன் வரலாறு முழுதும் உள்ளபடி யெழுதிக் கொடுத்தான். அரசன் படித்துப் பார்த்து, வருத்தத்தை யெல்லாந் தன் மனதில் அடக்கிக்கொண்டு, "நல்லதிருக்கட்டும், நீர் என் மந்திரிகளில் ஒருவராயிரும்" என்று கட்டளையிட்டு அவனுக்கு ஆடையாபரணங்களுதவித் தன் அரண்மனையிலேயே யிருக்கும்படி திட்டம் செய்தான். புதிய மந்திரிக்கும் அரசனுக்கும் அதிக சிநேகமுண்டாயிற்று. சிலநாட் சென்றதும், ஒருநாள் புதியமந்திரி உள்ளே

வரும்படியான அவசரம் நேரிட்டது. உள்ளே போய் அரசனைப் பார்க்க, அரசனுக்குப் பதிலாகத் தன் மனைவி உட்கார்ந்திருக்கப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்து "வாருங்கள்" என்று உபசரித்து எதிர் கொண்டுவர, அதற்குள் மந்திரி பிரக்ஞைதப்பி மூர்ச்சித்து விழுந்துவிட்டான். அவளோடிவந்து அவனைத் தூக்கித் தன் மார்பில் அணைத்து உபசரித்துக் களைப் பாற்றி, "என் பிராணநாதா! நான் உம்மைக்கண்டு உம்மோடு ஒரு வார்த்தையாவது பேசினபின் உயிர் விட வேண்டுமென்று கருதி யிருக்கிறேன். நீர் அஞ்ச வேண்டாம். உமக்கு இந்தப் பெரிய ராஜ்யத்தையும் சம்பாதித்து வைத்திருக்கிறேன்" என்று தன் வரலாறு முற்றுமொழிந்து அவனைத் தேற்றினுள். சோழ ராஜன் தன் மனைவியைக் கண்டு, "ஆ என் கண் மணியே! நீ உயிரோடு இருக்கிருயா? எனக்கு வாழ்வு கிடைத்ததா? நான் செய்த, மன்னிக்கத் தகாத குற்றங்களையெல்லாம் மறந்துவிட்டு என்னை யாதரிக்கின்ற, என்னுயிரே! நானுனக்குச் செய்யத்தக்கது என்ன இருக்கின்றது? எப்படியும் நான் செய்தது தவறுதான். நீ அதை மன்னித்து, என்னை இனி உன் அன்புக்குப் பாத்திரவனுக்கிக்கொள்" என்று இரந்து வேண்டினுன். பங்கயச்செல்வி, அரசனை அன்போடு பார்த்து, "என் இறைவா! எனக்கு உபசாரமேன்? நான் எந்நாளும் உமக்கு அடிமைதானே! என்னை இனியாவது பணிவிடைக்கு ஏற்றுக்கொள்ளும்" என்றுகூறி அவனை மகிழ்வித்தாள். இருவருமகிழ்ந்திருக்கும்போது, ஒரு நாள் பூதம்வந்து பங்கயச்செல்வியை நோக்கி "நாளைய தினம் காலையில் ஒரு சந்நியாசியைப்போல வருகிறேன்.

அப்பொழுது உன் மந்திரிமார் எல்லாரையும் சபைக்கு வரச்சொல்லிக் கட்டளையிடு. உன் கணவனுக்குப் பட்டங் கட்டி வைக்கின்றேன்" என்று சொல்லிப் போயிற்று.

மறுநாள் விடிந்தபின் பங்கயச்செல்வி மந்திரி மார்களெல்லாரையும் வரச்சொல்லிக் கட்டளையிட அவர்களெல்லாரும் வந்து சேர்ந்தார்கள். அப்போது பூதம் ஒரு சந்நியாசியைப்போலப் பங்கயச்செல்வி யிடம்வந்து "நீ உன் சுயரூபத்தோடுகூடச் சபைக்கு வா" என்றுகூறி, அவளையும் அவளுடைய கணவனை யும் அழைத்துத்தானும் சபைக்கு வந்தது. அதைப் பார்த்த மந்திரிமார்கள் இது என்ன ஆச்சரியமென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். சந்நியாசிவந்து சிங்கா சனத்தில் உட்கார்ந்தார். பங்கயச்செல்வியும் அவள் கணவனும் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். சந்நியாசி எழுந்து நின்று "மந்திரிமார்களே! கேளும்; நான் பூத வனத்துக்கு வேந்தனாகிய பூதராஜன். இந்தப்பெண் என்னுடைய புத்திரி. அவன் என்னுடைய மருமகன். அவனுக்கு இந்தப் பட்டத்தைக் கட்டிவைத்து, என் பெண்ணினுடைய ராஜ்யபாரச்சுமையை இறக்குங்கள். இந்தப் பெண்ணை நான்தான் ஒரு காரணத்தால் ஆணாக்கி வைத்திருந்தேன். நான்தான் பட்டத்து யானையை என்காட்டுக்கு இழுத்துக்கொண்டு போய், இவளுக்குப் பூமாலைசூட்டிப் பட்டங்கட்டச்செய்தேன். இவையெல்லாம் உங்களுடைய நன்மைக்காகவே செய் தேன். இந்தச் சிறுபெண் பூபாரந் தாங்கவல்லவள் அல்ல. ஆதலால் இவளுடைய நாயகனை உங்களுக்கு அரசனாக்கிக்கொண்டு சுகமாக வாழுங்கள்" என்றது.

மந்திரிகள் மிகமகிழ்ந்து, "அப்படியே யாகட்டும்" என்ருர்கள். நல்ல சுபமுகூர்த்தத்தில்சோழனுக்குப்பட்டங் கட்டினுர்கள். சிலநாட் பொறுத்துப் பாண்டியனுக்கு இந்தச் சமாச்சாரந் தெரியவந்தது. அவன் தன் மந்திரிகளோடு மலையநாடுவந்து, தன் மகளைத் தழுவி முத்தமிட்டு, மருமகனையும் ஆதரித்துச் சில நாளங்கிருந்து பின்பு சோழனுடைய ராஜ்யத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் சீமைபோய்ச் சேர்ந்தான். பின்பு சோழனும் பங்கயச்செல்வியும் இரண்டு நாட்டையுமொன்ருகச் சேர்த்து அரசுபுரிந்து நீடூழி வாழ்ந்திருந்தார்கள்.

---

## சொல்லவல்லவன் கேட்கவல்லவன் கதை.

தென்நாட்டில் ரவிநாதன் என்னும் கொடுங்கோலரசனெருவனிருந்தான்; அவனுல் அந்த நாட்டில் அநேக குடிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்த அரசனுக்கு யார்மேலாவது கோபம் வந்தால் அவன் அவர்களுடைய நிலம் மனையாதி சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்து அரச பொக்கிஷத்தை நிரப்பிவிட்டுக் களித்திருப்பான். அப்படித் தண்டிக்கப்பட்டவர்களைத் தன் ராஜ்யத்தின் கீழ் எல்லையாகிய பூதவனத்துக்கு அனுப்பிவிடுவான். அவர்கள் அவ்வனத்தினுள்ள பூதங்களுக்கு இரையாய் ஒழிவார்கள். சிற்சிலர் மட்டும் தெய்வகதியால் அவ்வனத்தின் ஓரங்களில் குடியா யிருப்பார்கள். அப்படி மிஞ்சினவர்களெல்லோரும் அவ்வனத்துப் பூதராஜனை நோக்கி நாங்கள் உங்களுடைய குடிகளாய் உமக்கு அடங்கி

வாழ்கிறோம். எங்களுக்கு இறைவனாயிருந்து பரிபாலித்தருளும்" என்று வேண்டிக்கொண்டார்கள். பூதராஜன் அப்படியே சம்மதித்தான். ஆனாலும் அவர்களுக்குத் துன்பமொழிந்தபாடில்லை. ஒவ்வொரு சமயங்களில் பூதக்கூட்டங்கள் அந்நகரத்துக்கு வந்து மாடு கன்றுகளையும், அகப்பட்ட மனிதர்களையும் பிடுங்கித் தின்றுபோம். இதனால் அந்தக் குடிகளுக்குக் கஷ்டம் மிகுதியே. கொடுங்கோலரசன் செய்யும் துன்பம் இதனினும் பெரிதாதலாலும், வேறு வழியில்லாமையாலும் எல்லாரும் மனதுக்குள் புழுக்கங்கொண்டு கிடந்தார்கள்.

இப்படியிருக்கையில் அவ்வரசனிடத்தில் இரண்டு சகோதரர்கள் இராணுவ உத்தியோகஞ் செய்துவந்தார்கள். மூத்தவன்பெயர் சொல்லவல்லவன். இளையவன்பெயர் கேட்கவல்லவன். மூத்தவன் எந்தக் காரியங்களையும் தீரயோசித்துத் தகுந்த யுக்திசொல்வதும், அவன் சொன்னதைக் கேட்டு இளையவன் அப்படியே தவறாமல் நிறைவேற்றுவதும் வழக்கமாதலால் அவ்விருவர்க்கும் அப்பெயர் இடப்பட்டன. இவர்கள் இராணுவத்தில் கீர்த்திபெற்ற போர்வீரர்கள். கொடுங்கோலரசனுக்கு இவர்கள் மேல் ஏதோ ஒரு காரணத்தால் கோபம் உண்டானமையால் அவர்களுடைய ஆஸ்திகளைப் பறித்துக்கொண்டு அவர்களையும் பூதவனத்துக்கோட்டிவிட்டான். அவர்களும் தலைவிதியை நொந்துகொண்டு அங்கேவந்து ஒரு சிறிய வீடு கட்டிக்கொண்டு வசித்துவந்தார்கள். இவர்களுடைய வீரப்பிரதாபங்களை யுணர்ந்த குடிகள் எல்லாரும் அவர்களிடம் வந்து பூதங்களால் தங்களுக்கு நேரிடும் விபத்துக்

களைக்கூறி, "நீங்களும் இந்தக் கதிக்குள்ளானீர்களே! நீங்கள் வீராதிவீரர்களானதால் உங்களாலேதான் எங் களுக்கு விமோசனகாலம் வரவேண்டும். இன்று முதல் உங்களிருவரையும் எங்களுக்குத் தலைவர்களாக நிய மித்துக்கொண்டு உங்களுக்கு அடங்கி வாழ்கிறோம். எங்களை எப்படியாவது இந்தத்துன்பத்தில் நின்றும் விடுதலையாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார் கள். அவ்விருவரும் சம்மதித்து, "நீங்கள் ஒன்றுக் கும் அஞ்சவேண்டாம்" என்று கூறியனுப்பினார்கள். அங்கே சொல்லவல்லவன் பேரே மிகுதியாகப்பிரஸ்தா பத்திலிருந்தது. எப்பொழுதாவது பூதத்தைக்கண்டால் சொல்லவல்லவனுக்குக் கூறுங்கள்என்பார்கள். இதைக் கேட்ட பூதங்கள் ஆக்ரோஷம் உண்டாய் "அவனாடா சொல்லவல்லவன்" என்று கூவிக்கொண்டிருந்தன. பின் பூதராஜனிடம் இந்தச் சமாசாரத்தை யெல்லாம் பூதங் களுங்கூறின. பூதராஜன் கோபங் கொண்டு தன் படைத்தலைவருள் ஒரு பூதத்தை நோக்கி, "நீ போய் அந்தச் சகோதரரிருவரையுங் கொன்று விட்டுவா" என்று அனுப்பியது. அந்தப் பூதம் "அப்படியே செய் கிறேன்" என்று புறப்பட்டது. ஆனாலும் பூதத்துக்கு அவனிடத்தில் பயந்தான்; அஞ்சி அஞ்சி வந்து பார்க்கச் சொல்லவல்லவனிருக்கும் கெம்பீரத்தையும், வீரக்குறிகளையுங் கண்டு, "நாம் இவனை ஜயிப்பது அரிதுதான். இவனுடைய முகமே இவனது வீரத் தைத் தெரியப்படுத்துகின்றது. சண்டையிட்டு வெற்றி கொள்வது சாத்தியமன்று: வஞ்சனையினாலேதான் கொல்லவேண்டும்" என்று கருதி அவனுக்குத்தெரி யாதபடி அவனோடுகூட வயலுக்குப் போயிற்று.

அங்கே அவனுடைய அதிகாரத்தையும், ஜனங்கள் வணங்கி ஒடுங்கி நடப்பதையும் பார்த்துச் சமையம் வரட்டுமென்று காத்திருந்தது. சாயந்திரம் ஊர் ஜனங்களோடு அவனும் சேர்ந்து மாடுகளையும், ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு வரும்போது அந்தப்பூதமும் ஓர் ஆடு வடிவமாகி, ஆட்டுமந்தையோடுகூடக் கலந்து வீட்டுக்குவந்தது. ஆட்டுப்பட்டியைத் திறந்து ஆடுகளை உள்ளே விடும்போது இதுவும் உள்ளே நுழைந்து போயிற்று. சொல்லவல்லவன் அந்த ஆட்டினுடைய சரீரபுஷ்டி துஷ்டத்தனம் முதலானவற்றைப் பார்த்தும் ஓர் ஆடு அதிகமாயிருப்பதை யுணர்ந்தும் "இந்த ஆடு ஏதோ ஒரு மாயையாக இருக்கவேண்டும். பூதந்தான் இப்படி வடிவமெடுத்து வந்து நம்மைக்கொல்லக் கருதியிருக்கிறாப்போலிருக்கிறது" என்று கருதி, கேட்கவல்லவனைக்கூவி "இந்தப் பெரிய ஆட்டைப் பிடித்துக்கொண்டுவா; இன்று இரவுக்கு இதையடித்துக் கறியாக்கித்தின்னலாம்" என்று கட்டளையிட்டுப் போனான்.

அதைக்கேட்டு அந்தப் பூதஆடு பயந்து நிற்க, கேட்கவல்லவன் அதன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி யிழுத்துக்கொண்டு வந்தான். அது அங்கும் இங்கும் ஓடத் தொடங்கியது. அவன் அதை ஓர் உதை உதைத்துக் கீழே தள்ளி அதன் கையையும் காலையுங் கட்டிப்போட்டுக் காகாவென்று இழுத்துக் கொண்டு வந்தான். அப்போது பூதம் "இது ஏதடா பேரிடியா யிருக்கின்றது. ஓர் உதையாலேயே நம்முடைய விலாவெலும்பு முறிந்து போயிற்றே! இவனுடைய பலம் இப்படியானால் பெரியவன் பலம் எப்படியோ தெரியாது! நாம் எப்படித் தப்புவது?"

என்று கருதி நடுங்கி, அப்புற மிப்புறம் புரண்டு அவனை நடக்கவொட்டாமல் செய்ய அவன் மறுபடியும் அதைப் புரட்டிப் புரட்டி உதைத்து, அதைத் தூக்கித் தோளின்மேலே போட்டுக்கொண்டு போனான். அந்த உதைகளினால் பூதத்தின் எலும்புகள் நொறுங்கின. அதனாலே அந்தப் பூதம் "இது என்ன ? இன்று நமக்கு அட்டமத்துச் சனியனாயிருக்கிறது. நமக்கு மரணகாலம் சமீபித்துவிட்டது. நாம் தின்கிற மனிதனுக்கு நாம் இரையாக வேண்டிய காலம்வந்துவிட்டது. இவனைக் கெஞ்சியாவது தப்பித்துக்கொள்ளவேண்டும்" என்று கருதி, அவனைக்கூப்பிட்டு "ஐயா ! நான் ஆடு அல்ல; நான் ஒரு பூதம்; எங்கள் அரசன் கட்டளையால் உங்களைக்கொல்லவந்தேன்; நான் பட்ட உதைபோதும்; என்னைவிட்டுவிடும்; நான் ஓடிப்போகிறேன்" என்றது. அந்தச்சொல்லைக் கேட்டவுடன் " அப்படியா! உன்னை நான் விடமாட்டேன்; என் அண்ணன் சொன்னதைத்தான் கேட்பேன்; வீட்டுக்குக் கொண்டு போய், உன்னைத் துண்டுதுண்டாக வெட்டிக் கறியாக்கித் தின்றுவிடுகிறேன்; உனக்கு இவ்வளவு ஆணவமா? நீ எனக்கு ஒரு துரும்புக்குச் சமானம் அல்லவா? என்னைக் கொன்று தின்னவந்தாயா? உன்னை முதலில் தின்றுவிட்டுப் பின்பு அரசனைக்கொன்று எங்களுடைய பரிஜனத்தாருக்கு விருந்து இடுகிறேன்" என்றுகூறி, அது கதறிப்புலம்பியும்விடாமல் தூக்கிக்கொண்டு வந்து அண்ணன் திருவடியில் போட்டு நடந்த சமாச்சாரங்களையும் அவனுக்குத்தெரிவித்தான். சொல்லவல்லவன் கேட்டு " ஏ மசகமே! நாங்கள் உன்னையாவது உங்கள் எஜமானையாவது ஒரு

பொருளாக எண்ணுவோமோ? நல்லது, என் தம்பி சொன்னபடியே செய்கின்றேன். பின்பு உங்களையெல்லாம் கொன்று பட்சணம் செய்துவிடுகிறேன்'' என்று கூறப், பூதங்கேட்டு நடுநடுங்கி, "ஐயா! உம்முடைய வல்லமை எனக்குத் தெரியும். நான் போகமாட்டேனென்று சொன்னேன். எங்கள் அரசர் கட்டாயம் பண்ணி அனுப்பினர். இது என் குற்றமல்ல! வேலைக்காரர்கள் செய்வதென்ன? உங்களுக்குத் தெரியாதா? என்னை இந்தத் தடவை மன்னித்து விட்டால் நான் ஓடிப் பிழைத்துப்போகிறேன். அவ்விடத்தில் இருக்கிற என் இனத்தாரையும் அழைத்துக்கொண்டு எங்கேயாவதுபோய் விடுகிறேன்'' என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டது. அதைக்கேட்டுச் சொல்லவல்லவன் தன் தம்பியைப்பார்த்து "அப்பா! இந்தக்கொசுகைக்கொன்று தின்றால் நமக்குத்தான் வயிறு நிறையுமா? உனக்குத் தான் என்ன பெருமையிருக்கிறது? அதைக் கட்டவிழ்த்து விட்டுவிடு! அது பூத ராஜனிடம்போய் உன்னுடைய பெருமையைச் சொல்லட்டும்'' என்று சொன்னான். தம்பி உடனே அதன் கட்டையவிழ்த்து விலாப் புறத்தில் ஒரு குத்துக் குத்தி ஓட்டினான். அது இடிமுழக்கம் கேட்டதுபோல வீறிட்டுக்கொண்டு "பிழைத்தேன் பிழைத்தேன்'' என்று வாயில் இரத்தம் கக்கிக் கொண்டு ஓடிப் பூத ராஜனிடம்போய் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லி "இனி நான் அவ்வழி போக மாட்டேன்'' என்று கூறி முறையிட்டது.

பூதராஜன் அதைக்கேட்டு மஹா உக்கிரங்கொண்டு, தன்னுடைய பிரதானியைப் பார்த்து "இனி செய்வது யாது? இந்த மானிடப்பதருக்கு நாம் பயந்து

அடங்கிவாழ எனக்குச் சம்மதமில்லை. என்ன சொல்லு கிறுய்" என்றுகேட்டது. அப்போது நான்கு பூதங்களை ஏவி "நீங்கள் அவ்விருவரையும் விழுங்கி வாருங்கள்" என்றனுப்பியது. அந்தப்பூதங்கள் உள்ளுக்குள்ளே நடுக்கங் கொண்டாலும், வெளிக்குப் பயமில்லாதவர் களைப்போலப் பாவனை காட்டிப் புறப்பட்டுப் போய்ச் சாயங்காலவேளையில் சொல்லவல்லவன் வீட்டைச் சுற் றித் திரிந்தன. ஒன்றை யொன்று பார்த்து "நாம் இவர்களை ஜயிப்பது அரிது. ஆதலால் இந்த வீட்டில் மாயா ரூபங்கொண்டு உட்கார்ந்திருந்து இரவில் அவர்கள் தூங்குகிறபோது ஒரே அமுக்காய் அமுக் கிக்கொன்று விடுவோம்" என்று பேசிக்கொண்டு நடை யில் பல்லிரூபங்கொண்டு சுவரிலிருந்தன.

வெளியிலேயிருந்து வந்த தமையன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும்போது நான்கு பல்லிகள் சேர்ந்து நிற்பதைக்கண்டு, "இது என்ன ஆச்சரியம்? நான்குபல்லிகள் கூடியிருக்கின்றன. நாம் இதுவரையிலும் இப்படிப்பட்ட விந்தையைக் கண்டது மில்லை கேட்டதுமில்லையே! இது பூதங்களின் தந்திரமா யிருக்குமென்று கருதி உள்ளே நுழைந்து, எப்போ தும்போல மனைவியோடும், தம்பியோடும், மக்களோ டும் பேசிக்கொண்டிருந்து, போஜனஞ்செய்தபின் படுத் துக்கொள்ளப் போகும்போது தம்பியைப்பார்த்துத் "தம்பீ! பூத நாற்றம் நாறுகிறது; ஜாக்கிரதையாயிரு" என்றுகூறிப் படுக்க அனுப்பிவிட்டு, தன் மனைவியை நோக்கி "நான் வாசற்படியில் படுத்துக்கொண்டிருக் கிறேன்; குழந்தையைக் கிள்ளி அழவிடு; நான் ஏன் பிள்ளை அழுகிறது என்று கேட்டால், பூதபட்சணம் வேண்டுமாம் அதற்காக அழுகின்றது என்று சொல்"

என்று திட்டஞ்செய்தனுப்பிவிட்டுப் படுத்துக்கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் பிள்ளை அழுதது. அதைக்கேட்டுச் சொல்லவல்லவன் "அடியே! என் பிள்ளை அழுகிறது? சீக்கிரம் சமாதானஞ்செய்" என்றான். அவள் "குழந்தை பூதபட்சணம் கேட்கின்றது; நான் என்ன செய்வேன்" என்றாள். அவன் "நான் காலையில் எட்டுப் பூதங்களைக் கொண்டுவந்து கொடுத்தேனே என்னசெய்தாய்?" என்று கேட்டான். "அவற்றை அரைத்து அடைதட்டிக் கொடுத்தேன்" ஆய்விட்டது. என்றாள். அவன் "தம்பீ! உலக்கையைஎடு; பூதவாசனையடிக்கிறது; இப்பொழுதேபோய் அவற்றைக்கொன்று எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்றான். தம்பி, "அண்ணனைநோக்கி, "அண்ணா! இதற்குநீர்போகவேண்டுமா? நானே போய்வருகிறேன். சமீபத்திலே தான் வாசனை அடிக்கிறது. நீர்இங்கே இரும்" என்றுசொல்லி உடனே உலக்கையையெடுத்துக்கொண்டுபுறப்பட்டான். தமையன் கதவைத்திறக்கவந்து, "தம்பீ! இதேதிந்த நடையிலேயே வாசனையடிக்கிறது? அடியே ஆரடீ! சீக்கிரம் விளக்குக்கொண்டுவா" என்றான். அவள் இதோ வருகிறேனென்றாள். அதுகேட்ட பூதங்கள் "இது என்ன பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது! நம்மை இவன் வாசனையால் கண்டுபிடித்துக் கொண்டானே! இனி இங்கே இருக்கக்கூடாது" என்று கீழேஇறங்கி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தன. அதைக்கண்ட அண்ணன், "தம்பி! விடாதே அடி அடி!" என்றுகூற, அவன் தடியைச் சுழற்றி, வீசி யெறிந்துவிட்டுப் பின் தொடர்ந்து ஓடினான். முன் சொன்ன தடி பூதங்களின்மேல் இடி விழுந்தது போலப்பட, அவைகள் தட்டுக்கெட்டுத் தடு

மாறி இடறிவிழுந்து எழுந்து ஓடின. தம்பி "இதோ வந்தேன் வந்தேன்" என்று ஓடினான். பூதங்கள் நடு நடுங்கிப் பறந்தன. தம்பி திரும்பி வந்துசேர்ந்து படுத் துக்கொண்டான்.

பூதங்கள் தங்கள் ராஜனிடம் போய்த் தாங்கள் பட்டபாடுகளைச் சொல்லி, "இனி நாங்கள் போகமாட் டோம்" என்று சொல்லின. பூதம் மிகுந்த கோபங் கொண்டு மந்திரியைப் பார்த்து "நீ போகிறாயா? நான் போகட்டுமா?" என்றது. மந்திரி "நானே போய்வருகி றேன்" என்று புறப்பட்டது. அவன் வீட்டுக்குப் போய், மாட்டுக்கொட்டிலில் வந்து மாட்டோடு மாடாய் படுத்துக்கொண்டிருந்தது. மறுநாட் காலையில் அண் ணன் தம்பி யிருவரும் மாட்டுக் கொட்டிலில் வந்து பார்க்க ஒருமாடு அதிகமா யிருக்கக்கண்டு அண்ணன், தம்பியைப் பார்த்து "தம்பீ! இந்தக் கொழுத்த மாட் டைக் கொண்டுபோய் உழு. இதுவே பத்துக்காணியும் உழும்" என்றான். அவன் அப்படியே அதைப்பிடித்து இழுத்தான். அது முரண்டு இழுக்க, அவன் அதை இரண்டு குத்துக் குத்தி இருத்திப் பிடித்து, ஏரில் கட்டி உழுதான். அது பத்துக்காணியை உழு தது. தம்பி ஆச்சரியப்பட்டு இது ஒரு பெரும்பூத மென்று கருதி நன்றாய்ப்புடைத்து வேலை வாங்கினான். சாயங்காலத்தில் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வரும் போது அது நடக்கச் சக்தியில்லாமல் தள்ளாடி நடக்க அந்தத் தாற்றுக்கோலால் நன்றாய்க் குத்தி ஓட்டிக் கொண்டுவந்து தொழுவத்தில் கட்டினான். அப்போது அண்ணன் வந்து, "தம்பி! என்ன செய்தி" என்றான். அவன் "அண்ணா! நீர் சொன்னபடியே பத்துக்காணி உழுதது. இது ஒரு பூதம்" என்றான். உடனே அது

கெஞ்சித் தன் வரலாறு கூற அதையும் அவிழ்த்து ஓட்டி விட்டான்.

அதுபோய்ப் பூதராஜனைக் கண்டு, தான் பட்ட பாடுகளைக் கூற, அதுகேட்டு பூதராஜன் தன் பரிவாரத்தோடு தானே புறப்பட்டு வந்து வாசலில் கச்சேரி போட்டது. அதைக்கண்டு சொல்லவல்லவன் தன் மனைவியையும் மக்களையும் பக்கத்துவீட்டுக்கு அனுப்பி விட்டுத் தானுந் தம்பியும் கொல்லையிலிருக்கும் புளிய மரத்தின்மேலேறிக்கொண்டார்கள். பூதம் வீடெல்லாஞ் சுற்றிப் பார்த்துக் கொல்லையில் வந்து புளியமரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு, வீட்டைச் சூழக் காவல்செய்தது. தமையன் தம்பியைப் பார்த்துத் "தூங்காதே தூங்காதே" யென்று சொல்லிக்கொண்டு எழுப்பிக்கொண்டே வந்தான். கடைசியில் தூங்கித் தவறி மரத்தின்மேலிருந்து கீழே விழுந்தான். அண்ணன் பார்த்து மோசம் வந்ததென்று தைரியத்தை விடாமல் "தம்பீ! விடாதே பிடித்துக்கொள்! பிடித்துக் கொள்!" என்றான். அவன் பூதராஜன்தலையில் விழுந்து அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு "பிடித்துக்கொண்டேன்" என்றான். பூதம் தன்னாலானமட்டுந் திமிறியும் முடியவில்லை. தம்பி அதன் மண்டைபிளக்க ஒரு குத்து வைத்தான். அண்ணன் இதோ வந்தேனென்று மரத்திலிருந்திறங்கினான். இந்த அரவம் கேட்டுப் பூதங்களெல்லாம் பறந்தன. பூதராஜன் பயந்து, அவன் பிடித்த பிடியால் விழிபிதுங்கிக் கெஞ்சிற்று. அண்ணன் ஒரு உலக்கையை எடுத்துக்கொண்டு வந்து எதிரே நின்றான். பூதராஜன் "என்னை விட்டுவிடு; இனி நான் உனக்கு அடிமை" என்று கெஞ்சிற்று. பின்பு இருவரும் அதனிடத்தில் சத்தியம் வாங்கிக்

கொண்டு, அதை விட்டுவிட்டார்கள். அன்று முதல் பூதராஜன் தன் பரிவாரத்தோடு சொல்லவல்லவன் இட்டவேலையைச் செய்துகொண்டிருந்தது. அந்தக் கிராமத்தா ரெல்லாரும் அவ்விரு சகோதரர்களையும் வாழ்த்தி வணங்கி நடந்தார்கள்.

கொஞ்சநாள் கழித்து அந்தக் கிராமத்து ஜனங்க ளெல்லோரும் சொல்லவல்லவனை நோக்கி, "மஹாப் பிரபோ! இப்பொழுது நாம் நல்ல ஸ்திதியிலிருக்கி றோம். நம் எல்லாரையும் அவமானஞ் செய்து, இப் படிப்பட்ட துன்பத்துக்காளாக்கிவைத்த கொடுங்கோ லரசனைத் தண்டித்து, அவனுடைய கர்வத்தை யடக்கி னால் எங்களுக்குத் திருப்திகரமாயிருக்கும். தவிரத் தாங்களே அரசனாயிருந்து அந்தச் சீமையை இத னோடு சேர்த்து அரசாள வேண்டும். அப்படிச் செய் தால் நமது தேசத்துப் பிரஜைகளெல்லோரும் சுகப் படுவார்கள்" என்று சொன்னார்கள். சொல்லவல்லவ னுக்கு அது சம்மதமில்லாவிட்டாலும், அநேக ஜனங் களை இரட்சிக்கிறதாக விருப்பதால் ஒத்துக்கொண்டு பூதப்படைகளைத் திரட்டி அதற்குக் கேட்கவல்லவனைப் படைத்தலைவனாக நியமித்து அனுப்பினான். அவன் அப்படியே போய்க் கொடிய யுத்தஞ் செய்து இரவி நாதனையும் அவனுடைய மந்திரி பிரதானிகளையும் சிறையாக்கிக்கொண்டு வந்துவிட்டான். உடனே, சொல்லவல்லவன் தென்னாட்டுக்கு அரசனாக மகுடஞ் சூட்டிக்கொண்டு நீதிமுறை தவறாமல் அரசுபுரிந்து வந்தான். கொடுங்கோ லரசன் கீழிருந்து கஷ்டப் பட்ட குடிகளெல்லோரும் பரமசுகமடைந்து சொல்ல வல்லவனை வாழ்த்தி அவனுக்கடங்கி வாழ்ந்தார்கள். இரவிநாதனும் அவன் பிரதானிகளும் அவனுக்குக்

கீழ் உத்தியோகஞ்செய்து ஜீவித்து வந்தார்கள். இப்படியாகச் சொல்லவல்லவராஜன் சிலநாளில் இத்தேசத்துச் சக்கிரவர்த்தியாகிச் செங்கோலோச்சி வாழ்ந்திருந்தான்.

---

## ஏழைக் குடியானவன் ராஜாதிபதியான கதை.

மதுரா நகரத்தில் முத்தன் என்ற ஓர் ஏழைக்குடியானவனிருந்தான். அவன் தனக்கிருந்த ஒரு காணி நிலத்தையும் உழுது பயிரிட்டு ஜீவனஞ்செய்து கொண்டிருந்தான். தெய்வகடாட்சத்தால் அவனுக்கு எட்டுப் பிள்ளைகளும் ஒருபெண்ணும் பிறந்தார்கள். இவ்வளவு பெரிய குடும்பத்தை நிலவரும்படியைக் கொண்டு பாதுகாக்கமுடியாமையால் அவன் ஊர்தோறுஞ்சென்றுகூலி வேலை செய்துவருவான். அவனுடைய மனையாளும்கூலி வேலை செய்துவந்தாள். இவ்விருவருடைய வருமானங்களினாலும் குடும்பசம்ரட்சணை செய்வது கஷ்டமாயிருந்தமையால், கஷ்டஜீவனமே செய்து வந்தார்கள். பெரிய வயதுள்ள பிள்ளைகளும் ஆடுமாடு மேய்த்தல், வயல் வெளியில் சென்று களைபிடுங்குதல் முதலிய வேலைசெய்து வந்தார்கள். ஆறுவயதுள்ள கடைசிப் பிள்ளை மாத்திரம் யாதொரு வேலையுஞ் செய்வதில்லை. தாய் தந்தையர் அந்தப் பிள்ளையையும் வேலைக்குப் போகும்படி சொல்வதுண்டு. அவன் போவதில்லை. சிறுபிள்ளை யென்று கருதிச் சற்றுச் செல்வமாகவே விட்டு வந்தார்கள்.

ஒருநாள் மாடுமேய்க்கிற ஒரு பிள்ளைக்குச் சரீரம் சௌக்கியமில்லா திருந்தமையால் இவனை யழைத்து,

"இரண்டு மாடுகளின் கால்களைத் தளைந்துவிடுகிறேன். இன்று மாத்திரம் நீ போய் மாடுகளைப் பார்த்துக்கொள்" என்று சொல்ல, அப்புதல்வன் "என்னுலாகாது" என்றான். தாயார் அவனுக்கு நல்லவார்த்தைகள் சொல்லி "இன்று மாத்திரம் நீ போ; நாளைக்குப் போகவேண்டாம்" என்றுசொன்னாள். அந்தப் பிள்ளை, "இந்த ஈனத்தொழில்செய்ய எனக்குப் பிரியமில்லை—" என, "ஆனால் என்ன தொழிலிலே தான் உனக்குப் பிரியம்? சொல்" என்று அவள் கேட்டாள். நான் அரசனாக இருந்து, தங்கத்தூணில் சாய்ந்துகொண்டும், வெள்ளித்தூணில் உதைந்துகொண்டும் மந்திரி பிரதானிகளை அதட்டி அதிகாரஞ் செலுத்திக்கொண்டு மிருக்கப் பிரியப்படுகிறேன்; அது தவிர வேறு தொழிலிலெனக்குப் பிரியமில்லை" என்றான். தாயாருக்கு அதைக் கேட்டதும் அண்டுபடாத கோபம் மூண்டு, "கஞ்சிக்கு வீங்கிக்கிடக்கும் கரிகாலா! உனக்கு இவ்வளவு ஆணவமா? நீ ராஜனாகப் பார்க்கிறாயா? மதிகெட்ட கழுதையே!" என்று வைது, தன் கையிலிருந்த இருப்புக் கரண்டியினாலேயே ஓங்கித் தலையிலடித்தாள். சிறுவன் மண்டை பிளந்து பெருங்காயமாயிற்று. அதினின்று இரத்தம் வெள்ளமாய்ப் பெருகி வழிந்தது. அதனால் கண்கூடத் தெரியாமற் போயிற்று. அவன் அந்த அடி தாங்கமுடியாமல் அலறிக்கொண்டு வாசலிலே ஓடிவந்து விட்டான். சற்று நின்று தன்மேலிருந்த சிறிய கந்தையினாலே முகத்தில் வழியும் இரத்தத்தைத் துடைத்து அதையே அக்காயத்தின்மேல் கட்டிக்கொண்டு ஊரைக் கடந்து போய் விட்டான்.

நான்கு நாழிகை வழிதூரந்தாண்டிப்போய்க் காயத்தின் உபத்திரவத்தினாலும், பசிக் களைப்பினாலும் வழி நடந்துவந்த இளைப்பினாலும் மெத்த வருந்தி ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டான். அப்போது ஒரு குடியானவன்வந்து அவனைப்பார்த்து "நீயார்" என்று கேட்டான். அவன் தன் விருத்தாந்தத்தைச் சொன்னான். "அப்படியானால் எழுந்திருந்து என்கூடவா? உனக்கு வைத்தியஞ் செய்து சொஸ்தப்படுத்துகிறேன்" என்று அழைத்துக் கொண்டுபோய்ச் சில நாள் தன் வீட்டில் வைத்துக்கொண்டிருந்தான். நாளடைவில் காயம்சௌக்கியமாய் விட்டது. அந்தக் குடியானவன் பையனை யழைத்து, "அப்பா உனக்குடம்பு சௌக்கியமாய் விட்டபடியால், இனிமேல் நீ சும்மா இருக்கக்கூடாது. இந்த மாடுகளை மேய்த்துக்கொண்டுவா? உனக்கு ஆகாரம் கொடுக்கிறேன்" என்றான். அந்தப் பையன் ஒரு நாள் மாடுகளை யோட்டிக்கொண்டுபோய் மேய்த்தான். அது அவனுக்குக் கஷ்டமாகவே யிருந்தது. அதனால் களைத்து இனிமேல் இவ்வூரிலிருக்கக் கூடாது என்று நினைத்துக்கொண்டு விடியுமுன் எழுந்திருந்து அவ்வூரைவிட்டுப் போய்விட்டான்.

நான்கு மயில் தூரத்தில் துளுவம்பட்டி என்றொரு கிராமமிருந்தது. அந்தக் கிராமம் அரசன் வந்து தங்குகிற இடம். ஆதலால் அதில் குடிகள் நிறைந்து சகல வளங்களும் நிரம்பி யிருந்தபடியால் அதிலேயே தங்கினான். ஊரில் பிச்சையெடுத் துண்ண அவனுக்கு மனம் வரவில்லை. கூலிவேலை செய்யவுந் தெரியாது. ஆகையாலவன், இரண்டு மூன்று நாள் பட்டினிகிடந்து வருந்திக் கடைசியில் பிச்சையெடுத்துண்ணத் தீர்மானித்துக்கொண்டு, இரவில் வீடுதோறும் சென்று

யாசித்துக் கிடைத்ததைக் கொண்டுவந்து புசித்து ஊருக்கு வெளியிலே யிருக்கும் சாவடியில்படுத்து நித்திரை செய்துவந்தான். இப்படிச் சிலநாட் செல்ல அந்நாட்டு அரசன் தன் வழக்கம்போல் அங்கேவந்துதங்கினான். அவனுடைய பெருமைகளை யெல்லாம் பார்த்து மனதுக்குள்ளே வருந்தி "நாமும் இவனைப்போலே ஒரு மனிதன்தானே; இவன் சகல ஜனங்களும் வணங்கப்பெருமையோடு வாழ நாம் ஊரிலே யாசித்துக் கஷ்டப்படுவதோ! இது தெய்வத்துக்கு நீதியாமோ! ஆ! தெய்வமே! நீ யிவ்வளவு பட்சபாதகம் பண்ணுவதானல் உலகத்திலே நீதி எப்படி நிலைக்கும்? இனி ஜீவனை விட்டு விடுவதே யோக்கியம். உலகத்திலே பெருமையோடு வாழவேண்டும். பெருமையில்லாதவன் செத்த பிணம்போலே யிகழப்படுவான் என்பது நிச்சயம்" என்று கருதிச் சாவடிக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு பாழுங் கிணற்றில் விழுந்திறக்கத் துணிந்து, நடுராத்திரியில் ஒருவரும் அறியாதபடி யெழுந்திருந்து கிணற்றண்டைபோய், அதன்கரைமேலுட்கார்ந்துகொண்டு மனங்கசந்தழுதான்.

பிறகு அவன் எழுந்துநின்று கிணற்றில் குதிக்கப் போனான். அந்தக் கிணற்றில் நெடுங்காலமாக வசிக்கிற ஒரு பூதம் வெளியிலே வந்து "யாரடா! இங்கே வந்து அழுகின்றவன்? இப்பொழுதே ஓடிப்போ; இல்லாவிட்டால் நான் உன்னைத் தின்றுவிடுவேன்" என்றது. பையன் அதை நோக்கி "நீ யார்? எங்கிருந்து வந்தாய் சொல்" என்றான். அதற்குப் பூதம் "என்னடா என்னைக் கண்டும் பயப்படாமல் என் வரலாறு கேட்கிறாய். நில்லாதே! ஓடு" என்றது. அவன்

“ நான் மரணத்துக்குத் துணிந்து இந்தக் கிணற்றில் விழுந்து இறக்கவந்திருக்கிறேன். ஆகையால் நான் உனக்குப் பயப்படவேண்டியதில்லை. நீயார் சொல்லு; அப்புறம் என் வரலாறு சொல்லுகிறேன்” என்றான். பூதம் அவனது தைரியத்துக்கு மெச்சி, “அடா! நான் இந்தக்கிணற்றில் வசிக்கும் பூதம்! நான் உன்னைத் தின்ன வந்திருக்கிறேன்! என் சொரூபத்தைப் பார்” என்று ஒரு தென்னைமர உயரம் வளர்ந்து நின்றது. பையன், அதைப் பார்த்துச் சற்றுப் பயந்து, பின் தெளிந்து, “ஓ பூதமே! நான் தாய்தந்தையரால் துரத்தப்பட்டு அநாதையாய் வந்து விட்டேன். வந்தவிடத்தில் மஹா கஷ்டங்கள் நேர்ந்தன. ஆகையால் நான் இந்தக்கிணற்றில் விழுந்து உயிர்துறக்க வந்தேன். உனக்கு இஷ்டமானால் நீ என்னைத் தின்றுவிடு. அதற்கு நான் பயப்படவில்லை” என்றான். பூதம் அவனிடத்தில் கருணைவைத்து “நீ என் கூடவா? உன்னை ராஜாதிபதியாகச்செய்கிறேன்” என்று கூறி அவனை நடுக்காட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், நீர்வளம், நிலவளம் சிறந்த ஓர் இடத்தில் வந்து நின்று, “இந்த இடத்தில்தான் நீவசிக்கவேண்டும்” என்று கூறிப்பக்கத்திலிருந்த மலைச்சார்பில் பிரமாண்டமான ஒரு மாளிகையை உண்டாக்கி, அதில் அவனையிருத்தி, “இந்த அரண்மனையிலிருந்துகொண்டு இங்கே வருகிற ஏழைகளுக்கு அன்னம், வஸ்திரம், படுக்க இடம் முதலியன கொடுத்து உபசரித்துக்கொண்டிரு. உனக்குப் பதினாறு வயதானவுடனே இந்த ராஜ்யத்துக்கு மகுடாபிஷேகம் செய்து வைக்கின்றேன். அதுவரைக்கும் நான் சொன்னபடிசெய்.” என்று கட்டளையிட்டுப் பூதம் மறைந்துவிட்டது.

அந்த அரண்மனை வெகு அழகாயும், ஆச்சரிய மானதாயுமிருந்தது. அவனுக்கு வேண்டியவைகளெல்லாம் நிறைந்திருந்தன. அவனுக்கும், அங்கே வரும் எளியவர்களுக்கும் வேண்டிய ஆகாராதிகள் குறைவில்லாமலிருந்தன. நாடோறும் வழிப்போக்கர்கள் அங்கே வந்து போய்க்கொண்டிருந்தார்கள். கஷ்டஜீவனம் செய்து வருந்தின ஏழைகள் தங்கள் குடும்பத்தோடு வந்து சேர்ந்து அவனுக்கு ஊழியஞ்செய்து ஜீவிக்கத் தொடங்கினார்கள். நாளடைவில் அது ஒரு கிராமமாயிற்று. ஜனங்கள் பயிரிடத்தொடங்கினார்கள். அப்பொழுது பூதம் வந்து பையனைத்தனியாக அழைத்துக்கொண்டுபோய் ஒரு மலைக்குகையைத்திறந்து காட்டி இது உன் பொக்கிஷசாலை. நீ எத்தனை வருஷம் உயிரோடிருந்து கணக்கில்லாமல் செலவு செய்தாலும் இது குறையாது. உன்னைப் பின் பற்றியிருக்கும் ஜனங்களுக்குங் கொடுத்து நல்ல வீடுகள் கட்டிக்கொண்டும், பயிரிட்டும், வியாபாரஞ் செய்தும் அவர்களை ஜீவிக்கச் சொல். இன்னும் நான்கு வருஷத்துக்குள் இது ஒரு பெரிய நகரமாய் விடும். நீ என்னோடு வழக்கிட வல்லவனா யிருந்தபடியால் நானுனக்கு வல்லவராஜனென்று பேரிட்டிருக்கிறேன். இந்த மோதிரத்தைக் கையில் தரித்துக்கொள். அப்பொழுது எல்லாருடைய மனக்கருத்தும் உனக்குத் தெரியும். இந்தப் பிரம்பைக் கையில் வைத்துக்கொள். இது வியாதிகளைத் தீர்ப்பதற்கும், சத்துருக்களை ஜயிப்பதற்கும் உதவியாக இருக்கும்'' என்று சொல்லிப் போய்விட்டது.

அப்படியே வல்லவராஜன் வந்தவர்களுக்கெல்லாம் ஏராளமாகத் திரவியசகாயஞ் செய்தும், தீராத வியாதி

களைத் தீர்த்தும் வந்தான். இந்தக் கீர்த்தியெங்கும் பரவினதினல் வெகு தூரங்களிலிருந்துகூட அநேக ஜனங்கள் இங்கேவந்து குடியேறினர்கள். நான்கு வருஷத்துக்குள் அது பெரிய நகரமாயிற்று. அந்த நகரத்துக்கு அவன் அரசனுனன். சில நாட்களுக்குள் அது ஒரு நாடாயிற்று. அப்போது பூதம்வந்து இணையில்லாத சௌந்தரியமுள்ள ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் புரிவித்து, அவனை அந்த நாட்டுக்கு அரசனென்று மகுடஞ் சூட்டியது. இந்த ராஜ்யத்தின் வளமையைக் கேட்டு ஜனங்களெல்லாரும் இங்கே குடியேற வந்து கூடினர்கள். வர்த்தகர்களெல்லாரும் வல்லவராஜ்யத்துக்கு வந்து வியாபாரஞ் செய்துகொண்டிருந்தார்கள். வல்லவராஜன் தன் மனைவியோடு மன மகிழ்ந்து அரசு செலுத்தி நீதி தவருமல் குடிகளைக் காத்துவந்தான். அவன் தாய் தகப்பனை வெறுத்து வந்தாலும் அவர்கள் மேலுள்ள விருப்பம் அவனுக்கு ஒழியவில்லை. தான் இவ்வளவு செல்வத்தோடு வாழும்போது தன் மாதா பிதாக்களும் சகோதர சகோதரிகளும் கஷ்டஜீவனம் செய்து வருவது அவனுக்கு மனவருத்தமாகவே யிருந்தது. அந்தக் கவலை அவனுக்குத் தீரா வருத்தத்தை உண்டாக்கிற்று. அதை வெளியிற் காட்டாமல் தன் மனதுக்குள்ளேயே யடக்கிக்கொண்டு வந்தான்.

அவனுடைய மாதாபிதாக்கள் அவன் பிரிந்து போனபின், பல இடங்களில் தேடிப்பார்த்தும் அகப்படாமையால் நிராசையாய் விட்டு விட்டார்கள். மூத்தவனுக்கு இந்தச் சிறுபிள்ளையினிடத்தில் பிரியம் அதிகம். அவன் பிரிந்ததனல் உலக ஆசையிலேயே அவனுக்கு வெறுப்புண்டாய் விட்டது. அவன் இலௌகிக விஷயத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டான். இத

ஞல் நிலம் பலன் கொடாமற் போகவே அரசாங்கத்தார் அவனுடைய பூமியைப் பறித்து மற்றொருவனுக்குக்கொடுத்துவிட்டார்கள். அதனல் அந்தக் குடும்பம் மிகத்தாழ் வடைந்தது. அன்னடம் கஷ்டப்பட்டும் சரியான வரும்படி யில்லாமையால் அவர்கள் ஜீவிப்பதே கஷ்டமாயிருந்தது. இப்படி யிருக்கையில் ஒரு வழிப்போக்கன் வந்து அந்த வீட்டுத் திண்ணையிலே படுத்துக்கொண்டான். வல்லவராஜன் பிதா அந்த வழிப்போக்கனை, "நீர்! எந்தவூர்? எங்கே போகிறீர்?" என்று விசாரித்தான். வழிப்போக்கன், "ஐயா! நான் வெகு தூரத்திலிருந்து வருகிறேன்; என் குடும்பம் தரித்திரத்தால் வருத்தப்படுகிறது வல்லவ ராஜ்யத்திலே சகலவிதமான பிழைப்பும் யிருக்கிறதாம். அரசன் ஏழைகளுக்கு இரங்கி உதவி புரிகிறனும். அங்கே போனல் சௌக்கிய முண்டாமென்று பலர் சொன்னர்கள். என்னுடைய பந்து வர்க்கத்தார் சிலரும், அங்கே குடியேறி யிருக்கிறர்கள். நானும் அங்கே போய்ச் சீவிக்கலாமென்று யோசிக்கிறேன்" என்றன். "அப்படியானல், நாங்களும் வருகிறேம்" என்று வல்லவன் பிதா சொல்ல இருவரும் கலந்து பேசி முடித்துக்கொண்டார்கள். பின் மூத்தவன் தன் மனைவிக்கும் மக்களுக்கும் இதைச்சொல்ல, அவர்களும் மனக்களிப்போடு ஒப்புக்கொண்டார்கள்.

மறுநாட் காலையில் எல்லாரு மெழுந்திருந்து வழிப்போக்கனேடுகூடப்போனர்கள். மூத்தவனுடைய குமாரர்கள் வழியிலே எதிர்ப்பட்ட காய்ந்த மரக்கிளைகளை முறித்துக் கட்டினர்கள்; இப்படியே விறகுகளை முறித்துக் கட்டித் தலைக்கு ஒவ்வொரு விறகுகட்டைத் தூக்கிக்கொண்டு வல்லவன் நகரத்துள் நுழைந்து

விறகை விலைகூறினார்கள். ஒவ்வொரு கட்டுக்கும் இரண்டுபணம் கிடைத்ததனால் கையில் பத்துப்பணம் கிடைத்தது. அன்று எல்லோரும் வயிறு நிரம்ப உண்டு மகிழ்ந்தார்கள். இரவு வந்தபின் மூத்தவன் தன் மனைவி மக்களை நோக்கி, "நமக்கு இவ்வூரில் நல்ல தொழில் கிடைக்குமளவும் காட்டுக்குப்போய் விறகு கொண்டுவந்து விற்போமானால் நமது ஜீவனத்துக்குங் கண்டு கையில் இரண்டுபண மிருத்துவைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னான். எல்லோரும் சம்மதித்தார்கள்; மறுநாள் முதல் அப்படியே விறகு விற்று வந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் ராஜவீதியில் விறகுவிலை கூறிக் கொண்டு வரும்போது, மேனிலையில் தன்மனைவியோடு நின்று கொண்டிருந்த வல்லவன் உற்றுப் பார்த்து, விறகு விற்பவர்கள் தன் மாதா பிதாக்களும், சகோதர சகோதரிகளாயு மிருக்கக்கண்டு, தன் மனைவியைப் பார்த்து "விறகு விற்பவர்களைப்பார்த்தாயா ? இரண்டு பெரியவர்களும் உன் மாமியாரும் மாமனாருமாம் ; மற்றவர்கள் உன் மைத்துனர்; அந்தப் பெண்கள் உனக்கு நாத்தி மார்கள்" என்று கூறினான். அவள் கேட்டுத் திகைத்து நின்று "அவர்கள் இப்படிக் கஷ்டப்பட நாம் இந்திரபோகம் அநுபவிப்பது அழகல்லவே" என்றாள். "நீ சொல்வது சரிதான்! அவர்களை அழைப்பிக்கிறேன்" என்று சொல்லி வேலைக்காரர்களால் அவர்களை அவன் அழைப்பித்துவிறகுக்குத்தக்கவிலையளித்து, அவர்களை நோக்கி, "நீங்கள் இன்று முதல் என் அரண்மனையில் வேலைசெய்துகொண்டு சுகமாக இருங்கள்" என்று கூறி அவரவர்கட்குத் தக்க வேலைகளை யிட்டுத்

தன் தாயாரை மாத்திரம் தன் மனைவியி னிடத்தி லேயே வைத்து மரியாதையாய் நடத்தினான்.

இப்படிச் சிலநாள்செல்ல, வல்லவன் சாயலாலும், குரலாலும் தன் கடைசிப் புத்திரன்போலத் தோன் றக்கண்ட அவன் தாயார் சந்தேகப்பட்டு வாய்திறவா மல் அதை மனதுக்குள்ளேயே வைத்துக்கொண்டிருந் தாள். அவனிடத்தில் அவளுக்கு ஒரு பிரியமுண்டா யிற்று. அவனும் வேறுபாடில்லாமல் தன் தாயுடன் உற வாடி வந்தான். தாயாருக்கோ நாளுக்குநாள் இந்தச் சந்தேகமதிகரித்து, மனக்கவலையும் வருத்தமு முண்டா யின. ஒருநாள் வல்லவன் தன் தாயாரை அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டு, தான் ஒரு பொற்சிம்மாசனத்திலுட்கார்ந்து, தங்கத்தூணில் சாய் ந்து வெள்ளித்தூணில் காலுதைந்து கொண்டு, மனைவி பக்கத்திலிருந்து அடைகாய் கொடுக்க, மந்திரிமார்கள் வந்து ராஜாங்க விஷயம் பேச, தேவேந்திரனைப் போலக் கொலுவீற்றிருந்தான். அவன் தாயார் தன் புத்திரன் தான் இப்படியிருக்கவேண்டுமென்று சொன் னதும் அதற்குத் தான் கோபித்துக் கரண்டியாலடித் ததும், அறியாத பாலகன் அந்த அடி பொறுக்கமாட் டாமலோடிப்போனதும், அவனிருக்கிற இடங்கூடத் தெரியாமலிருப்பதும், இந்த வல்லவராஜனுடைய நட வடிக்கைகளும், குணாதி சயங்களும், அந்தப் புத்திர னுக்கு ஒத்திருப்பதும் நினைந்து மிகவருந்தினாள். கொலுக்கலைந்தபின் வல்லவன் பக்கத்தில் விசனமுகத் துடன் உட்கார்ந்திருக்கும் கிழவியைப் பார்த்து "ஓ அம்மா! உமக்கென்ன மனவருத்தம்? நான் உமக்கொரு குறைவும் வைக்காமல் நடத்திவருகையில் விசனம்வரக் காரணமென்ன? ஒளியாமல் சொல்லவேண்டும்" என்

ளுன். அவள் பயந்து தன் மனதில் உள்ளவற்றை எல்லாம் ஒளியாமல் சொல்லி, "உம்மைப் பார்த்தால் என் புத்திரன்போலவே யிருக்கிறபடியால் மனவருத்த மதிகரித்தது" என்ளுள். வல்லவன், "அம்மா! உலகத்தில் குணுதிகளால் ஒருவரை ஒருவர் ஒத்திருப்பது சுபாவந்தானே! உமக்குத்தான் அந்தக் கவலே யென்னத்துக்கு? நான் உம்மைத் தாயாராகவே நினைத்திருக்கிறேன். நீரும் அப்படியே என்னைப் புத்திரனுகப் பாவிக்கத் தடையில்லை" என்று சொல்லி, அவளை மகிழ்வித்தான்.

பின் ஒருநாள் அப்பியங்கனஞ் செய்யத் தைலம் கொண்டுவரச் சொல்லி, அந்தக் கிழவியைப் பார்த்து "அம்மா! என் தலைக்கு எண்ணெய் இடு" என்ளுன். அவள் சிறிது கூச்சத்தோடு வந்து எண்ணெய் இட்டாள். மயிரைக்கோதி யெண்ணெய் தேய்க்கும்போது அவன் தலையிலிருந்த வடுவைக்கண்டு, "ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்? தலையில் நான் அடித்த கரண்டி வடுக்கூட இருக்கிறதே! அரசன் தலையில் வடு வருவானேன்" என்று யோசித்துக்கொண்டு சற்று நின்றுவிட்டாள். வல்லவன், "அம்மா? ஏன் சும்மா நிற்கின்றீர்கள்?" என்று கேட்டான். அவள் "உமது தலையில் பெரிய வடுவொன்றிருக்கிறதே! அது எப்படிவந்தது? அரசன் தலையில் வடுவரக் காரண மென்னவென்று யோசித்தேன்" என்ளுள். வல்லவன் "அம்மா! இது தெரியாதா! தங்கத்தூணில் சாய்ந்து வெள்ளித்தூணில் உதைந்துகொண்டு அதிகாரஞ் செலுத்த விரும்புகிறேன் என்று நான் சொன்னபோது நீ கோபித்துக் கரண்டியால் அடித்தாயல்லவா? அந்த வடுத்தான்

இது" என்று கூறினன். உடனே கிழவி மகிழ்ச்சி யால் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். வல்லவனும் அவன்மனைவியும் அவளை யுபசரித்து மகிழ்வித்தார்கள். தாய் தன் மகனையும் மருமகளையும் ஆசீர்வதித்தாள். இது மற்றவர்களுக்குத் தெரிந்ததும் அவர்களும் அவ ளிடம் வந்து யோக க்ஷேம சமாசாரங்களைப் பேசி மகிழ்ந்திருந்தார்கள்.

வல்லவனின் ராஜ்யத்தின் கீர்த்தி பெரிதாய் உலக முழுதும் பரவியதாலும் எங்கு மிருக்கும் வியாபாரிக ளெல்லாரும் அந்த ராஜ்யத்துக்கு வந்து விடுகிறபடி யாலும் மதுரா நகரத்தில் வியாபாரிகள் குறைந்து போனர்கள். அதனல் சரக்குகளெல்லாம் விலை யேறிப் பஞ்சகாலம் போலாயிற்று. அவ்வரசன் என்னகார ணத்தால் பஞ்சம் நேரிட்டதென்று விசாரிக்கையில் வல்லவன் ராஜ்யத்தின் விருத்தாந்தம் அவனுக்குத் தெரியவந்தது. தன் ராஜ்யத்துக்குள் ஒரு சிறிய ராஜ்ய முண்டாகித் தன் சீர்மையின் வாழ்வைக் குலைத்ததனல் "இதைவிட நமக்கு வேறே அவமானமும் வேண்டு மோ?" என்று கருதி வல்லவன்மேல் படையெடுத் தான். அது தெரிந்தவல்லவன் தானும் தளங்களைத் திரட்டிச் சேர்த்து எதிர்கொண்டுபோய் அவனேடு போர்செய்துவென்று அந்த ராஜ்யத்தையும் தனதோடு சேர்த்துக்கொண்டு சுகஜீவியாய் ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான்.

---

# மிளசரசன் கதை.

ஒரு நகரத்தில் ஒரு குடித்தனக்காரன் இருந்தான். அவன் தன் மனதுக்கிசைந்த மனைவியை மணம் புரிந்துகொண்டு அவளோடு கிரகஸ்தாச்சிரமதர்மம் நடத்தி வரும்போது, ஒருநாள் தன் மனைவியை நோக்கிப் "பெண்ணே! எனக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கிறது; வைத்தியனிடம் போயிருந்தேன்; அவன்வியாதி சௌக்கியப்பட நாட்செல்லுமென்றும், தகுந்த ஔஷதம் சாப்பிட வேண்டுமென்றுஞ் சொல்லி ஏதோ ஒரு மருந்து கொடுத்திருக்கிறான். அந்த மருந்து சாப்பிட்டு முடியுமளவும் ஏழு மிளகுகளை யரைத்து ரசம் விட்டுச் சாப்பிடவேண்டுமாம். அதுதான் பத்தியமாம். இன்றுமுதல் எனக்குப் பத்தியம் பிடிக்க வேண்டும்" என்றான். அவளுமிணங்கி அன்றுமுதல் ஏழு மிளகரைத்து ரசம் வைத்துத் தன் நாயகனுக்குப் பத்தியம் கொடுத்துவந்தாள். இப்படிச் சிலநாள் செல்ல, ஒரு நாள் அந்தப்பெண் ஏழு மிளகையெடுத்து அம்மியில் வைத்து அரைக்கும்போது ஒரு மிளகு அவளுக்குத்தெரியாமல் அம்மியின் கீழ் விழுந்து விட்டது. அவள் மிளகு விழுந்ததை வழித்தெடுத்துக்கொண்டு போய் ரசம் வைத்துத் தன் கணவனுக்கு அன்னமிடுகையில் அவன் "பெண்ணே! ஆறு மிளகை யரைத்துச் சாறுவைத்து விட்டாயே. பத்தியம் கெட்டுப் போகுமே" என்று வருத்தப்பட்டுக்கொண்டு சாப்பிடவில்லை. அவள் மறுபடியும் ஏழுமிளகு அரைத்து ரசம் காய்ச்சிக் கணவனுக்கு அன்னம் படைத்தாள்.

மறுநாள் காலையிலெழுந்திருந்து வீட்டு வேலை களைச் செய்து முடித்துவிட்டு ஆற்றுக்கு நீராடப் போகப் பிரயாணப்படும்போது, அப்பஞ் சுடுவதற்காக ஒரு குதிரில் அரிசிமாவு வைத்திருந்ததைப் பார்த்து, இதைக்காயப்போட்டு விட்டுப் போகலாமென்று நினைத் துக்கொண்டு குடத்தைக் கீழே வைத்துவிட்டுக் குதி ரின் கிட்டப்போனாள். அம்மியின் ஓரமாய்ப் போகும் போது இராத்திரி தன் கணவன் கோபித்துக்கொண் டது மனதிலே கிடந்து வருத்திக் கொண்டிருந்த தனால், அந்த மிளகைக் கண்டுபிடித்து நசுக்க வேண்டு மென்றுகருதி, அம்மியைப்புரட்டி, அதன்கீழ் இருந்த மிளகை யெடுத்துப், "பழிகார மிளகே! நீ அம்மி யின் கீழே மறைந்து கொண்டதனாலல்லவோ ஒரு நாளும் கோபியாத என் கணவன் என்னைக் கோபித் தார். இப்பொழுதுன்னை அம்மியில் வைத்து நசுக்கு கிறேன். நீ யென்ன செய்வாய் பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டு அதை அம்மியில் வைத்து நசுக்கப் போனாள். அந்த மிளகு "அம்மா! நீ யென்னைக் கொல்லாதே; நான் உனக்குக் குழந்தையாக இருந்து நீ சொன்ன வேலைகளை யெல்லாம் செய்கிறேன். என்னை யிப்பொழுது காப்பாற்றி விடு" என்று கெஞ்சிக் கேட் டது. அவள் மனமிரங்கி அதன் இஷ்டப்படியே கொல் லாமல் விட்டு, "உனக்குப் பேரென்ன வைத்துக் கூப் பிடுகிறது? சொல்" என்றாள். அது, "என்னை மிளகு ராஜாவென்று கூப்பிடு" என்றது. அதற்குச் சம்ம தித்து "மிளகு ராஜாவே! இதோ காயப்போட்டிருக்கிற அரிசிமாவைப் பாதுகாத்துக் கொண்டிரு" என்று உத் தரவு கொடுத்துவிட்டு அவள் குளிக்கப்போனாள்.

அவள் போன சிறிது நேரத்துக்குப் பின், மிளகு அந்தமாவை யெல்லாம் ஒரு தொம்பையில் போட்டு அதை உருட்டிக்கொண்டு போய்விட்டது. அரைக் காத வழிக்கு அப்பால் ஒரு வாணியன் எள் ஆட்டிக் கொண்டிருந்தான். அந்த வாணியன் மிளகு, தொம்பையை (மூங்கிலாற் பின்னிய குதிர்) உருட்டிக்கொண்டு போவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அதை நோக்கி "நீ யார்? உன் பேர் என்ன? எங்கே போகிறாய்?" என்று கேட்டான். மிளகு நான், "குழவிக்குத் தப்பிக் குதிச்சோடிப் போய், அம்மிக்கிடுக்கலே அல்லெல்லாம் பதுங்கி, இளிச்சவாய்ப் பாப்பாத்தியை ஏமாத்தி விட்டுவந்த மிளகுராஜன். பாப்பாத்தி அம்மாளுக்குப் பணம் சம்பாதிக்கப்போகிறேன். இந்தக் குதிரில் நிறையமாவும், வெல்லமும் இருக்கின்றன. நீ ஒரு குடம் எண்ணெய் கொண்டு வந்தால் நாமிருவரும் அப்பம் தட்டித் தின்னலாம்" என்றது. அவன் சம்மதித்து ஒரு குடம் எண்ணெய் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு சற்று நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்து பின் வாணியனைப்பார்த்து "இவ்வளவு அப்பங்களைச் சுட்டு நாமிருவரும் எப்படித்தின்கிறது? உன் மனைவி மக்களையும் அழைத்துக்கொண்டு வா; எல்லாருமாய்த் தின்னலாம்" என்றது. அவன் அப்படியே மனைவி மக்களை அழைக்கச் சந்தோஷத்துடனோடினான். அவன் போனதும், எண்ணெய்க்குடத்தையுஞ்சேர்த்து உருட்டிக்கொண்டு நான்குநாழிகைவழிதூரம்போக, அங்கே ஒரு குடியானவன் கரும்பை ஆலையிலிட்டாட்டி வெல்லம் காய்ச்சிக்கொண்டிருந்தான். அவன் மிளகைப்பார்த்து வியந்துநீ யாரென்று கேட்க, அது வாணியனுக்குச்சொன்னது போலவே சொல்லி, "என்னிடத்தில்

மாவிருக்கிறது; எண்ணெயிருக்கிறது; நீ ஒரு சாக்கு வெல்லங்கொண்டுவந்தால் அப்பஞ்சுட்டுத்தின்னலாம்'' என்றது. அவன் ஒரு சாக்கு வெல்லம் கொடுத்தான். உடனே அவனைப்பார்த்து ''நீ உன் மனைவி மக்களைக் கூட்டிக்கொண்டு வந்தால் எல்லாரும் சேர்ந்து தின்னலாம்'' என்று கூறி அவனை யனுப்பிவிட்டு வெல்லத்தையும் தொம்பைக்குள் போட்டு உருட்டிக்கொண்டு அரைக்காத வழி தூரம் போய்விட்டது.

அவ்விடத்தில் ஒரு கிராமம் இருந்தது. அங்கொரு அம்மையார் இருந்தாள். அவளிடம் போய் ''என்னிடத்தில் மாவிருக்கிறது;எண்ணெயிருக்கிறது; வெல்லமிருக்கிறது; நீ விறகு கொண்டு வந்து அப்பந்தட்டினால் நாமிருவரும் தின்போம்'' என்றது. அவள் சம்மதித்து அடுப்பு மூட்டி, மாவைப்பிசைந்து அப்பம் தட்டினாள். எல்லாம் தட்டிச் சுட்டானபின், மிளகு அம்மையாரைப்பார்த்து, 'அம்மையாரே! மலைபோலக் குவிந்து கிடக்கிற இவ்வளவு அப்பங்களை நாமிருவரும் எப்படித்தின்போம்; அண்டை அயல் வீட்டுக் குழந்தைகளை யழைத்துக்கொண்டு வந்தால் எல்லாரும் சேர்ந்து தின்போம்'' என்றது. அம்மையார் மிளகினுடைய தயாள குணத்துக்கு மகிழ்ந்து குழந்தைகளை யழைத்துக்கொண்டு வரப்போனாள். அதற்குள் மிளகு அப்பங்களை யெல்லாம் அள்ளித்தொம்பையில் போட்டு அதை உருட்டிக்கொண்டு சிட்டாய்ப்பறந்து ஒரு காத தூரம் போய்விட்டது. பின் பவளமஹாராஜன் அரசாளுகிற பவளபுரிக்குப் போய்ச்சேர்ந்தது. கோட்டை மதிலைத்தாண்டி உள்ளே நுழைவதற்குள் அஸ்தமித்துப் போய்விட்டது. மிளகுராஜன் அங்கிருந்த

ஒரு கிராம தேவதையின் கோவிலுக்குள் புகுந்து கொண்டு, அப்பம் தின்னத்தொடங்கிற்று.

மிளகு அப்பந்தின்பதைப்பார்த்த கிராம தேவதைக்கு வாயில் நீரூறியது. அது மிளகைக் கூப்பிட்டு "எனக்குக் கொஞ்சந்தா" என்று கேட்டது. மிளகு ஓர் அப்பத்தை யெடுத்து இரண்டாய்ப்பிட்டு, "உனக்குப்பாதி எனக்குப்பாதி" என்று சொல்லி ஒரு பாதியைத் தன் வாயில் போட்டுக் கொண்டு மற்றொரு பாதியைத் தேவதைக்குக் கொடுக்கப்போயிற்று. தேவதை அதை வாங்கக் கையை நீட்டியவுடன் அதையும் வாயில் போட்டுக்கொண்டு ஏமாற்றிவிட்டது. இப்படியே காளியை ஏமாற்றி எல்லா அப்பங்களேயுந் தின்றுவிட்டது. கடைசியான ஓர் அப்பத்தை யெடுத்து இரண்டாய்ப்பிட்டு ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு, மற்றொரு பாதியை முன் போலவே நீட்டிக்காளியை ஏமாற்றி, அதையும் வாயில் போட்டுக் கொண்டு எழுந்திருந்து காளிக்கு முன்னே கோணங்கிக் கூத்தாடி கீச்சென்று ஒரு சப்தம் போட்டது. அதனல் காளி திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தது. அதைக்கண்டு மிளகு கடகடவென்று சிரித்து, "உன் பவிஷு இவ்வளவு தானு?" என்று பரிகாசம் பண்ணிக்கொண்டு ஓடிப்போய்விட்டது.

காளி மிளகின் சாமர்த்தியத்துக்கு வியந்து மூக்கில் ஒருவிரலே வைத்துக்கொண்டு பிரமித்து ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். காளி குதித்தபோது தானிருந்த நிலே மாறி நின்றுவிட்டாள். விடிந்தபின் பூசாசாரி (பூசாரி) கோயிலுக்குள் புகுந்து, அம்மனுக்கு அபிஷேகம் செய்யப் போகும்போது, அம்மனிருக்கும் நிலேமையைப்

பார்த்து திடுக்கிட்டுப் பயந்து நடு நடுங்கித் திகைத்து நின்றான். சற்றுநேரம் பொறுத்துக்கொஞ்சம் மனம் தெளிந்து, "இது ஒரு நாளும் இல்லாத அதிசயமாயிருக்கிறது. இதுநன்மைக்கடையாளமோ தீமைக் கடையாளமோ நாமறியோம். இதை அரசனுக்குத் தெரிவித்துவிட்டால் என் பாரம் கழிந்துபோம்" என்று எண்ணிக்கொண்டு பவள மஹாராஜன் சமுகம் போய் "மஹாராஜாவே! நான் இன்று காலை பூசை செய்வதற்குக் கோவிலுக்குட் புகுந்து, அம்மனுக்கு அபிஷேகம் பண்ணப்போனேன். என்ன காரணத்தாலோ, கிழக்குமுகம் நோக்கியிருந்த அம்மன் மேற்கு முகமாய்த் திரும்பி, மூக்கில் ஒரு விரலை வைத்துக்கொண்டு நிற்கிறாள். அதைப்பார்த்துப் பயந்து சமுகத்துக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றான். அதுகேட்ட அரசன் ஆச்சரியப்பட்டு, அதைப்பார்க்கும் பொருட்டுத் தன் பரிவாரஞ் சூழ்ந்துவரச் சென்று பார்க்கப் பூசாசாரி சொன்னபடி சரியாயிருக்கக்கண்டு, அதிசயித்து, மந்திரிகளுடன் கூடிப் பலவாறு யோசித்துக் காரணம் ஒன்றுந்தோன்றாமல், மயங்கினான். பின்பு ஒருவாறு தெளிந்து, மந்திரியைப்பார்த்து, "மந்திரீ! இன்னம் ஒரு வாரத்துக்குள் இந்த அம்மனை முன்னிருந்ததுபோ லிருக்கும்படி செய்கிறவன் என் ராஜ்யத்தில் பாதியைப் பெறுவதுந்தவிர என் புத்திரியையும் விவாகம் செய்து கொள்ளலாம் என்று பறையடித்துத் தெரிவிக்கச் சொல்" என்று உத்தரவு செய்தான். அப்படியே மந்திரி பேரிகை யடித்து எல்லாருக்குந் தெரிவித்தான்.

இந்தச்சமாசாரம் கேட்டவுடன் நாலா பக்கங்களிலிருந்தும் மந்திரவாதிகள், அஞ்சனக்காரர்கள், ஜோதி

ஷர்கள், சாஸ்திர விற்பன்னர்கள் முதலிய மஹா மேதாவிகள் கூட்டங் கூட்டமாய் வந்து, தங்கள் தங்களுடைய முழுச்சாமர்த்தியத்தையும்பிரயோகித்துப்பார்த்தார்கள். பிரயோசனத்தினுல் பயனென்றுமில்லை. கூட்டம் பெருத்ததே ஒழிய ஆட்டத்தில் சாரமில்லை. ஏழு நாளாய் விட்டன. இனிமேல் ஒருவராலும் முடியாதென்று கொண்டு அரசன் நிராசையாய்ப் போய்விட்டான். எட்டாவது நாள் மிளகுராஜன் ராஜ சமுகத்துக்குப்போய், "நான் காளியைச் சரிப்படுத்த வந்திருக்கிறேன். நானப்படிச் செய்துவிட்டால் எனக்குப் பாதிச் சீமையையும் உன் புத்திரியையும் கொடுப்பீரோ" என்று கேட்டது. அதைக்கேட்ட சபையாரெல்லாரும் கலீரென்று சிரித்தார்கள். அரசன் சற்று நிதானித்து, அதன் கம்பீரவசனத்திலுலே ஏதோ சிறிது சக்தியிருக்குமென்று நினைத்துச் "சரி; நீயும் ஒரு கை பார்க்கலாம்" என்று உத்தரவு கொடுத்தான். அந்தச்சபையிலிருந்த மந்திரவாதிகள் முதலியோர், "நம் எல்லாராலும் முடியாத காரியத்தை யிந்த அற்ப மிளகு செய்து முடிக்கப்போகிறதாம். இது என்ன ஆச்சரியம்! இதையும் சற்றிருந்து பார்த்து விட்டுப் போவோம்" என்றிருந்தார்கள்.

பின் மிளகு ஆற்றுக்குப்போய் ஸ்நானம் செய்து ஜபதப முடித்துக்கொண்டு மடியோடு காளி ஆலயத்துக்குப் பிரயாணப்பட்டது. அரசன், மந்திரி, பிரதானி முதலியவர்களும், புற தேசங்களிலிருந்து வந்திருப்பவர்களும் அதைத் தொடர்ந்து போனுர்கள். கோயிலுக்குட் புகுந்ததும், அவர்களுக்குத் தக்கபடி அர்த்தமண்டப மஹா மண்டபங்களிலிருக்கச் செய்து

தான் கர்ப்ப கிருகத்துக்குள் புகுந்து கதவை அடைத்துக்கொண்டது. "ஏ காளிகாதேவி! என்னை மிளகாகப் படைத்து எத்தனை கஷ்டத்துக்குள்ளாக்கினாய்? என் உயிரைக் காப்பாற்றின பிராமண ஸ்திரீக்குப் பதிலுபகாரஞ் செய்யவேண்டும். எனக்கு மன்மத வடிவமுள்ள யௌவன மனித சரீரங்கொடுத்து, அரச புத்திரியையும் விவாகஞ் செய்வித்து, பாதிச் சீமையையும் வாங்கித்தரவேண்டும். நீ இந்த க்ஷணமே கிழக்குமுகமாகத் திரும்பிக்கொண்டு மூக்கில் வைத்திருக்கும் கைவிரலை யெடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் என் சாமர்த்தியத்தைக் காட்டுவேன். என்ன சொல்கிறாய்? இரண்டு நிமிஷத்துக்குள் பதில் சொல்" என்றுகூறிச் சும்மாவிருந்தது. காளிக்கு ஆத்திரமும்வெட்கமு மேலிட்டு வாய்திறவாமல்யோசித்து, "இது ஒரு பெரிய சாமர்த்தியமுடையது. இது கீச்சென்று இன்னொருமுறை கத்துமாயின் நாம் ஓடிப்போய்விட வேண்டியதுதான். ஆகையால் இந்த அசாத்தியக்கார மிளகு கேட்ட வரத்தைக்கொடுத்துத் தொலைத்துவிடுவதே நல்லது" என்று தன் மனதுக்குள் யோசித்துக் கொண்டிருக்கிறபோது மிளகு, "காளியம்மா! நான் கேட்ட கேள்விக்கு ஏன் பதில் சொல்லவில்லை. இக்ஷணத்திலே உன் கோவில் இடிந்து சமுத்திரத்தில் விழுந்துவிடும்படி செய்வேன். என்ன சொல்லுகிறாய்?" என்றது. உடனே காளி கிழக்கு முகந்திரும்பிக்கொண்டு, மூக்கின்மேல் வைத்த கையை யெடுத்துவிட்டு, "ஏ ஆகாத்தியக்கார மிளகே! அழும்புக்கார மிளகே! நீ கேட்டபடி வரங்கொடுத்தேன். இப்பவே யிவ்விடம்விட் டோடிப்போ" என்றாள். மிளகு உடனே யவ்வன மனித சொரூபமடைந்து

மன்மதனைப்போல் விளங்கிற்று. பிறகு மிளகு ராஜன் காளியின் பாதத்தில் வணங்கி "அம்மணீ அப்பொழுது நான் ஈனமிளகா யிருந்தபடியால் மூடச்செய்கையைச் செய்தேன். இப்பொழுது நான் மனிதனாய் விட்டபடியால் மனிதருக்குரிய கடைமைப்படி யுன்னை வணங்கித் துதிக்கிறேன் ; என்னைப் பாதுகாத்தருள்" என்று வேண்டக் காளி மனமகிழ்ந்து, "ஏ மிளகு ராஜனே ! நீ பவளராஜன் புத்திரியை மணந்து, பாதி ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு சுகமாக வாழ்ந்திரு" என்று ஆசீர்வதித்தனுப்பினாள்.

உடனே மிளகு கதவைத் திறந்துகொண்டு வெளியிலே வந்தது. பாலசூரியன்போல ஒளிவீசும் அதன் திருமேனியையும், சாமுத்திரிகா லட்சணங் குறையாத அத்திருமேனியின் அழகையும் பார்த்த அரசன் முதலியோர் "இது என்ன அதிசயம் ! என்ன விந்தை ! உள்ளேபோன மிளகுக்கு இந்த ரூபம் எப்படி வந்தது ? இது மாயமாயிருக்கிறது. காளியின் அநுக்கிரகமோ ? இந்திரஜால மகேந்திர ஜாலங்களிலொன்றோ?" என்று பலவாறு நினைந்து மயங்கியிருந்தார்கள். மிளகுராஜன் அப்பொழுது அரசனைப் பார்த்து மஹாராஜாவே ! காளியைப் பார்த்துக்கொள்ளுங்கள் ; சரிப்படுத்திவிட்டேன்" என்று கூறிற்று. அரசன் முதலியோர் கோவிலுக்குள் போய்ப் பார்த்து மகிழ்ந்து, மிளகுராஜனுக்குபசாரம் புரிந்து அப்பொழுதே பாதி ராஜ்யத்துக்குப்பட்டாபிஷேகஞ்செய்து முடித்துத்தன் செல்வப் புத்திரியையும் அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து மகிழ்ந்தான். மிளகுராஜன் தன் ராஜ்யத்தை நீதியாகப் பரிபாலித்து வருகையில் தன் உயிரைக் காப்பாற்றின குடித்தனக்காரன் மனைவியையும் அவள்

புருஷனையும் அழைத்து அவர்களுக்கு மிகுந்த பொருளைக்கொடுத்து தன் கிட்டத்திலேயே வைத்துக்கொண்டான்.

ஒருநாள் மிளகுராஜனும் அவன் மனைவி பங்கஜமும் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கையிலே பங்கஜம் தன் நாயகனைப் பார்த்து "நீர் மிளகு வடிவமாக இருந்ததற்குக் காரணமென்ன? சொல்லவேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள். அவன் சொல்லுகிறான்—"பெண்ணே! கேள்—நான் மலைநாட்டரசனுடைய புத்திரன். என் தகப்பன் வியாதிப்பட்டு மரணத்தை யெதிர்நோக்கி யிருந்தார். அச்சமையத்தில் மந்திரி ராஜ்ய காரியம் பார்த்து வந்தான். அதனால் அவனை ஆசைப்பிசாசு பிடித்து அலைத்தது. அவன்ராஜ்யத்தை அபகரித்துக்கொள்ள நினைத்தான். அதற்கு நான் இடையூறாக இருந்தபடியால் என்னையுங்கொன்று என் அரசையும் கவர நினைத்து என்னை வேட்டைக்கு அழைத்துக்கொண்டுபோனான். என் மனதில் கபடு இல்லாமைய... அவனிடத்தில் நம்பிக்கைவைத்து அவனைப் பின்பற்றிச் சென்று வேட்டையாடிக்கொண்டே வனத்துக்குள் நெடுந்தூரம் போய்விட்டேன். நான் வெயிலில் களைத்துப்போனேன்; தாகம்மேலிட்டபடியால் குடிக்க நீர் வேண்டுமென்று கேட்டேன். அந்தப்பாவி என்னை ஒரு குளிர்ந்த சோலையில் கொண்டுபோய்விட்டான். அந்தச் சோலைக்குள் அழகான ஒரு மாளிகையும் அதன் எதிரில் ஒரு ரம்மியமான குளமுமிருந்தன. அதைச்சூழ விருட்சங்கள் அடர்ந்துநிழல் பரந்து குளிர்ந்து இருந்தமையால் நான் மனமகிழ்ந்து, குளத்திலிறங்கிக் கைகால் சுத்திசெய்துகொண்டு, நாலுகைத் தண்ணீர் அள்ளிக் குடித்து, அந்த மாளி

கைத் திண்ணைச் சாய்மணையில் சாய்ந்து சற்றுத் தூங்கி விட்டேன். யாரோ என் காலைப் பிடித்து இழுத்த தாகத் தோன்றியது. விழித்துக்கொண்டு பார்த்தேன். ஆ! ஆ! என்னசொல்வேன்! பத்து வாலிபர்கள் என்னைத் தட்டியெழுப்பி 'நீயேன் இங்கே வந்தாய்? இந்தச்சோலை ஒரு ஜடாமுனியினுடையது. அதுஇங்கே வந்தவர்களைஎல்லாம் மரம் செடி கொடிகளாகச்செய்து விடுகிறது. இங்கே யிருக்கிற செடிகொடிகளெல்லாம் உன்னைப்போன்ற ராஜ குமாரர்களே. நீயும் இன்னம் க்ஷணப்போதில் சொரூபம் மாறிப்போவாய். சீக்கிரமெழுந்து ஓடிப்போ" என்றார்கள். நான் பயந்து கைகால் நடுங்க எழுந்திருந்து ஓட ஆரம்பித்தேன். என் பாவம் என்னைப் போகவிடவில்லை. அந்தக் கொடிய ஜடாமுனி வந்து எதிர் நின்றது. அதைக் கண்டு பிரக்ஞை தப்பி யிருந்தேன். அப்போது ஜடாமுனி என்னைப் பலபடி திட்டி, 'உன்னைக் கடித்து உதிரம் குடிக்கிறேன் பார்' என்று என் கையைப் பிடிக்க நான் கெஞ்சி, உயிர்ப்பிச்சை தரவேண்டினேன். அது, 'அப்படியானால் உன்னை மிளகாகச் செய்து இங்கே பயிரிட்டு வளர்க்கிறேன்' என்று கூறி, நானென்ன சொன்னாலும் கேளாமல் என்னை மிளகாக்கி ஒரு பாத்தியில் புதைத்தது. அப்போது என்னதிர்ஷ்டம் ஒரு கோழி வந்து அந்தப் பாத்தியைத் தோண்டி என்னை வெளியிலிழுத்துப் போட்டுவிட்டது. பின் ஒரு அடைக்கலங் குருவி கௌவிக்கொண்டு போய் மிளகுக் கொடிகள் படர்ந்திருந்த ஒரு தோட்டத்தில் போட்டது. தோட்டக்காரன் பொறுக்கி வியாபாரிகளிடம் விற்றான். நான் வியாபாரிகளின் உதவியால் உலகமெல்லாஞ் சுற்றி ஒரு குடித்தனக்காரனிடம்

போய்ச் சேர்ந்தேன். அந்த அம்மாள் கற்புள்ளவளாதலால் அவள் கைபட்டதுமெனக்குக் கொஞ்சம் அறிவுதோன்றிப் பின் இவ்வூர் வந்து சேர்ந்து காளியின் அநுக்கிரகத்தால் உன்னை மனைவியாகப் பெற்று வாழ்கின்றேன்''—என்று தன் வரலாறு கூறித் தன் மனைவியை மகிழ்வித்தான்; பிறகு படையெடுத்துப் போய்த் தனது சொந்தமான மலைநாட்டையும் மீட்டுக் கொண்டான்; தான் மிளகாயிருந்தபோது ஏமாற்றிய வாணியன், குடியானவன், கிழவி இவர்களை வரவழைத்து அவர்களுக்குத் தன் சரிதம் கூறி வேண்டிய பொருளைக் கொடுத் துபசரித்தனுப்பினான்; பிறகு தன் மனைவியோடு நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.

---

## பொறுமையுள்ள ராஜகுமாரன் கதை.

பூர்வம் கலிங்கதேசத்தைப் பரிபாலித்து வந்த அரசனுக்கு வசுமான், வாசவன், பாஸ்கரன் என்று மூன்று புத்திரர்களிருந்தார்கள். அவர்களில் மூத்தவர்களாகிய வசுமான் வாசவனிருவரும் வேட்டையாட விருப்பங்கொண்டு காட்டுக்குச் சென்றார்கள்; காட்டில் நெடுந்தூரஞ் சென்று பலநாள் வேட்டையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய மனம் வனங்களிலுள்ள விநோதங்களைக் காண்பதிலே அதிகமாய்ச் சென்றது. ஆகையால் அவர்கள் அங்கேயே திரிந்துகொண்டிருந்தார்கள்; நாட்டை நினைக்கவே யில்லை.

அவர்கள் இப்படி வராமலிருக்கவே பாஸ்கரன் தன் அண்ணன்மார்களைத் தேடியழைத்துவர வேண்டுமென்று கருதி ஒருநாள் நாட்டைவிட்டுப் புறப்

பட்டுக் காட்டுக்குச் சென்று எங்குந் தேடினன். அவர்களை அவ்வாறு தேடிக்கொண்டு சென்ற அவன் நெடுந்தூரம் போய்விட்டான். அவன் மனதிலே தன் அண்ணன்மார்களை அடையவேண்டும் என்கிற எண்ணமே அதிகமா யிருந்தமையால் தன் நாட்டையும் மறந்து திரிந்தான்; அப்படிப் பலநாள் திரிந்து தேடிய பிறகு ஒரு காட்டில் அவர்களிருவரும் அலைந்து கொண்டிருக்கக் கண்டான். கண்டதும் பள்ளத்திலே போய்ப் பாயும் கால்வாய் போல, ஓடி அவர்களை நெருங்கி " என் அருமை அண்ணன்மார்களே ? வந்தனஞ் செய்கின்றேன் ! உங்களுடைய அருமைத் தம்பியாகிய என்னையும் தாய்தந்தையரையும் நாட்டையும் மறந்து இங்கேன் அலைகின்றீர்கள்? உங்களைப் புலி சிங்கம் முதலிய கொடிய மிருகங்கள் அடித்துக் கொன்று விட்டனவோ என்று எண்ணிப் பெருந் துயரப்பட்டுக் கொண்டிருந்தோம் ; நல்ல வேளையாய் உங்களைக் கண்டேன் " என்று கூறினன்.

நெடுநாட்களாகக் காட்டிலேயே திரியும் அவர்கள், காட்டுமனிதர்களோடு அதிகமாய்ப் பழகி வருகிறபடியால் தங்களுடைய நாகரிக நடையுடை பாவனைகளைக் கைவிட்டு அவர்களுடைய நடவடிக்கைகளைக் கைக்கொண்டிருந்தார்கள். ஆதலாலே அவர்கள் தங்கள் தம்பியைக் கண்டதும் அன்பாய் வரவேற்பதைவிட்டு, அவனுடைய நடக்கைகளைக் கண்டு பரிகசித்தார்கள். அதைக்கண்ட பாஸ்கரன் " ஓ இவர்கள் பழக்கம் மாறியிருப்பதனல் நம்மைப் பரிகசிக்கின்றார்கள். பழக்கம் எப்படிப்பட்டவர்களையும் மாற்றிவிடும். நல்லவர்களோடு பழகுகிறவர்கள் நல்லவர்களாயும் கெட்டவர்களோடு பழகுகிறவர்கள் கெட்டவர்களாயும்

மாறுவதுஉலகத்திலே சகஜந்தானே! இவர்கள் அநாகரிகர்களாகிய இந்தக் காட்டு மனிதர்களுடைய பழக்கத்திலுலே தங்களுடைய நடவடிக்கைகளை மறந்துவிட்டார்கள். நிலத்தினுடைய தன்மையைப்போல அதிலே பாயும் நீரும்மாறுகிறதன்றோ? இவர்களைநாமிப்போது ஒன்றும் சொல்லப்படாது. இவர்களிச்சைப்படிவிட்டுத் திருப்பவேண்டும்" என்று எண்ணி, சற்றுநேரம் அவர்களுடையபோக்குப்படியேபேசிக்கொண்டிருந்து "பட்டணத்துக்கு வாருங்கள் போகலாம்; இங்கே காட்டிலே திரிவது நன்றாயில்லை. இங்கென்ன சுகமிருக்கின்றது?" என்று கூறியழைத்தான். அவர்கள், "எங்களுக்குப் பட்டணத்துக்கு வர விருப்பமில்லை. நீ போ" என்று கூறிவிட்டு நெடுகலும் தங்கள் மனம் போனபடி திரிந்தார்கள். பாஸ்கரன், அவர்களை அந்தக்கதியிலே விட்டுவரப் பிரியமில்லாமல் அவர்களோடு கூடவே தானும் திரிந்தான்.

இப்படியே மூவருஞ் செல்லுகையில் வழியிலே ஓர் எறும்புப்புற்றிருந்தது. அதைக் கண்டதும் இருவரும் நின்று "இந்தப் புற்றைக் கலைத்தால் எறும்புகள் இதிலிருந்து முட்டைகளோடு வெளிப்பட்டு அங்குமிங்கும் ஓடும்; அதைக் கண்டு களிப்போம்" என்று பேசிக்கொண்டு அதைக் கலைக்கப் போனார்கள். அதைக் கண்ட பாஸ்கரன், "இதைக் கலைக்கவேண்டாம்; இப்படிச் சிறு ஜந்துக்களுக்குத் தொந்தரவு கொடுப்பது அறிவல்ல. பெரும்பாவமாகும். இதனாலே நமக்கு வரும் லாபமென்ன? நம்முடைய வழியே நாம் போவோம்" என்று இதமாகச் சொன்னான். அவர்கள் அந்தப் புற்றை யொன்றுஞ் செய்யாமல் அப்பாலே சென்றார்கள்; வழியிலே அவர்களுடைய மனமெண்

ணியதை யெல்லாம் செய்யத் தொடங்கினர்கள். அதை யெல்லாம் பாஸ்கரன் அப்படிச் செய்வது தவறென்று அவர்கள் மனதிலே படும்படி தக்க நியாயங்களைக் கூறித் தடுத்துக்கொண்டே சென்றான்.

இப்படி இவர்கள்போய் ஓர் ஏரிகரையை யடைந்து அதன்மேலிருந்து அதன் ஜலத்திலே சிறு சிறு அலைகள் உண்டாவதையும் மதகின் வழியே ஏரியிலிருந்து ஜலம் ஜோ என்னும் ஒலியுடன் வெளிப்பட்டுக் குதித்துக் குதித்து ஓடுவதையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள், இந்தக் காட்சி பாஸ்கரனுடைய மனத்தையும் மகிழ்வித்தது. அவன் புத்திசாலியானதினால் அந்த ஏரியின் சமீபத்திலே ஒரு கிராமத்தை ஏற்படுத்தி அதன் நீரினாலே நிலங்களை நன்செய்யாக்கி அவற்றின் பயனை அந்தக் கிராமத்தாரடையும்படி செய்யவேண்டும்; இவ்வளவுபெரியஏரியாயிருந்தும்இது காட்டிலே யிருக்கிறபடியினாலே இதைக் கவனிப்பாரற்று வீணாகிறது. கடவுள் மனிதனுக்கு வேண்டிய சகல வசதிகளையும் கொடுத்துக்கொண்டு தான் வருகிறார். மனிதன் தன் புத்தியை உபயோகித்துப் பிரயாசைப்பட்டுத் தேடிச் சௌகரியத்தை யடைகிறதில்லை. அதற்கு இந்த ஏரி சாட்சியாகும்'' என்று கருதிக் கடவுளின் மகிமையைக் கண்டு மகிழ்ந்தான்.

இப்படி யிவர்களுடைய மனமிருக்கையில், அவ்வேரியிலே ஓரிடத்தில் சில வாத்துகள் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தன. அவற்றைக் கண்டதும் இளையவன் "இங்கும் யாரோ மானிடன் வந்து வாத்துக்களை மேய்க்கின்றான். பிரயாசைப்பட்டவன் பயன் அடைந்து மகிழ்கின்றான். சோம்பேறியே எதையுமடையா

மல் துன்பப்படுகின்றான்" என்று கருதினான். மூத்த வர்களிருவரும் இப்படிப்பட்ட நல்ல எண்ணங்களை மறந்து, நீரிலிறங்கி அவ்வாத்துக்களைத் துரத்தி அவற்றில் இரண்டை ஆளுக்கொன்றாகப் பிடித்துத் தூக்கி அங்கிருந்த பாறையிலே யடித்துக் கொல்லப்போனார்கள். பாஸ்கரன், உடனே அவர்களிடம் ஓடிச் சென்று, "ஐயோ பாவம்! இது மூடர்களுடைய செய்கையாகும்! புத்தியுள்ள நாம் செய்த்தகாதது! வாத்துக்கள் நமக்கு என்ன தீங்கு செய்தன? அவை சாதுவான ஜந்துக்கள்! இச்செய்கையை மறந்துவிடுங்கள்." என்று கூறித் தடுத்தான். அவர்கள் தம்பியின் பேச்சைச் சரியென்று ஒப்புக்கொண்டு வாத்துக்களை ஜலத்திலே விட்டு விட்டு அப்பாலே போனார்கள்.

மூத்தவர்களிருவரும் பல பல பேச்சுக்கள் பேசிக்கொண்டு சென்றனர். அந்தப் பேச்சுக்கள் யாவும் ஒரு காசுக்கும் பயன்படாதவைகளா யிருந்தன. ஆயினும் தம்பி வெகு பொறுமையோடு அவற்றைச் செவியிலே ஏற்றுக்கொண்டு தக்கபடி அவர்களுக்குப் பதிலுஞ் சொல்லிக்கொண்டுபோனான். தன் காரியத்திலே கண்ணாயிருப்பவர்கள் எதையும் பொருட்படுத்தமாட்டார்களல்லவா!—சிறிது தூரஞ் சென்றதும் அவர்களுக்கு முன்னே மரங்களடர்ந்த ஒரு சோலை தென்பட்டது. அதைக் கண்டதும் இருவரும் பெருமகிழ்ச்சியோடு குதித்துக்கொண்டு அதற்குள் நுழைந்தார்கள். பாஸ்கரனும் அவர்களோடு நுழைந்தான்.

அந்தச்சோலை கண்களைக் கவருமழகுடையதாயிருந்தது. சூரியனுடைய கிரணம் சிறிதும் அதிலே எங்கும் காணப்படவில்லை. வசந்தகாலமாதலால் மரங்க

யெல்லாம் சருகுகளுதிர்ந்து கண்களைக் கவரும்படியான இளந்தளிர்கள்விட்டிருந்தன. காற்றுவெகுசுகமாக வீசியது. சிட்டு, மணிச்சிட்டு, தகைவிலான், கொண்டைக்கொத்தி, மரங்கொத்தி, குயில், செம்போத்து, கிளி, மணிப்புரு, காட்டுப்புரு, வானம்பாடி, நாகணவாய்ப்புள் முதலிய பறவைகள் கலகலவென்று சப்தித்துக்கொண்டு கிளைக்குக்கிளை தாவி விளையாடிக்கொண்டிருந்தன.

இவைகளையெல்லாங் கண்டதும் அவர்கள் இங்குமங்குமோடுவதும், மரத்திலேறுவதும், கிளைகளை முறிப்பதும், பூக்களைப்பறிப்பதும், கற்களை மரங்களின் மீதெறிந்து பறவைகளைத் துரத்துவதுமாய் விளையாடினார்கள். பாஸ்கரனுடைய மனதையும் அந்தச் சோலை கவர்ந்தது. அவனும் பெருமகிழ்ச்சி யடைந்து, "யாரோ ஒருவனால் வைத்துப்பயிராக்கப்பட்டதுபோல இந்தக் கானகத்தில் இப்படி மரங்களடர்த்தியாய் வளர்ந்திருப்பது பெரிய ஆச்சர்யமே! இது நகரத்தையடுத்திருக்குமாயின் எவ்வளவு பயன்படும்? இது ஜனங்களின் கண்ணுக்கு இதுவரையிலே தென்படாத சோலைபோலிருக்கின்றது. பூமியிலே பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, இரும்பு முதலிய பஞ்சலோகங்களும் உண்டாகின்றன. அவற்றில் அதிர்ஷ்டமு முயற்சியுமுடையவனுக்கே பொன் கிடைப்பதை நாம் பார்க்கின்றோம். அதுபோல இச்சோலையும் உண்டாயிருக்கின்றது! முயற்சியும் அதிர்ஷ்டமுமுடையவன் எவனோ அவனே இதைக்கண்டு இதன் பயனை யநுபவிப்பான்"—என்று எண்ணி மகிழ்ந்தான்; தன்னுடைய அண்ணன்மார்களிருவரும் இதையறியாமல் வானரங்கள்

போல மிருகப்பிராயமாய்த் திரிந்து மனம் போனபடி நடப்பதை யெண்ணி வருந்தினான். "இவர்கள் எப்படி நல்ல புத்தியை யடையப் போகிறார்கள் ஜகதீசா!" என்று சொல்லி மனமுருகினான்.

இப்படி யிருக்கையில் அந்தச் சோலையிலே ஓர் உயரமான மரத்தில் ஒரு கிளையின் உச்சியிலே தேன் கூடு ஒன்றிருந்தது. அதைக் கண்டதும் மூத்தவர்களிருவரும், "இந்தத் தேன்கூட்டிலுள்ள ஈக்களைக் கலைத்துக் கொன்றுவிட்டுத் தேனைப் பிழிந்து குடிப்போம்" என்று பேசிக்கொண்டு "மரத்தின்மீது ஏறுவோமா? கல்லெறிந்து கலைத்துக் கொல்லுவோமா" என்று யோசித்தனர். இதைக்கேட்டதும் இளையவன், "என் அருமை அண்ணன்மார்களே! நீங்கள் நல்ல புத்தியுடையவர்கள்! உங்களுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன். இந்தத் தேன்கூட்டைக் கலைப்பது நமக்குப் பாவமாகும்! தேனீக்கள் நமக்கொரு தீங்குஞ் செய்யவில்லை யல்லவா? தீங்கு செய்யாதவர்களுக்கு நாம் தீங்கு செய்யலாமா? அல்லாமலும் இந்த அழகான கூட்டைக்கட்டி இதிலே பூக்கள் தோறுமிருக்கும் தேனைக் கொண்டுவந்து சேர்க்க இந்தத் தேனீக்கள் என்ன பாடுபட்டிருக்கும்? 'குசவனுக்கு நெடுநாள் வேலை, தடிக்காரனுக்கு ஒருநிமிஷ வேலை' என்பதுபோலவாகும் இதை நாம் கலைப்பது. மேலும் ஒருவர் அரும்பிரயாசைப்பட்டுத் தேடிய பொருளை நாம் அபகரிப்பதுகூடாது" என்று பிராணிகளைத் தொந்தரவு செய்வது பாவம் என்பதை அவர்களுணரும்படி பல நியாயங்கள் இதமாய்க்கூறினான். அவர்கள், பாஸ்கரனின் பேச்சை ஒப்புக்கொண்டு உடனே அங்

லிருந்து வேறு பக்கம் போனார்கள். பாஸ்கரனும், அவர்களைத் தொடர்ந்தான்.

மூவரும் கொஞ்சதூரஞ் சென்று ஒரு மலையினடிவாரத்தை யடைந்தார்கள். அம்மலையானது செங்குத்தாய்க் கீழிருந்து பார்ப்பவர்களுடைய மனங்கலங்கும்படி உயர்ந்திருந்தது. அதை மூவரும் பார்த்து அதிசயமடைந்து அதற்கருகே யிருந்த குன்றின்மீதேறினர். அப்பொழுது அஸ்தமிக்க ஆறு ஏழுநாழிகைப் பொழுதிருக்கும். கோடைகாலமாதலால் வெயில் கடுமையாயிருந்த போதிலும் காற்று மனோகரமாய் வீசியது. அங்கிருந்த ஒரு மரத்திலிருந்து அந்தக் காற்றினால் சிலகனிக ளுதிர்ந்தன. அவைகளைப் பொறுக்கி மூவருந் தின்றார்கள். பிறகு அவர்களுக்குத் தாகமெடுத்தமையால் நீர்நிலையைத்தேடிக்கொண்டு குன்றிலே நெடுகத் திரிந்து ஒரு சுனையைக் கண்டு அதிலிறங்கி மூவரும் நீரருந்தினார்கள். பிறகு அதிலிருந்து கரையேறுகையில் மூத்தவர்களிருவரும் வழுக்கி விழுந்து ஜலத்திலே மூழ்கினார்கள். அதைக் கண்டதும் பாஸ்கரன் அவர்களைக் கரையேற்ற எண்ணித் திடீரென்று சுனையிலே குதித்தான். அவனும் வெளிவரவில்லை.

இப்படி மூவரும் மூழ்கிய கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய மாளிகையிலே சந்தித்தார்கள்; அம்மாளிகையும் அதிலே தாமிருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள்; அம்மாளிகை யெங்கும் போய்ப் பார்த்தார்கள். அதில் எங்கே பார்த்தாலும் கல்யானைகளும் கற்குதிரைகளும் செங்குத்தான பெரிய பெரிய கற்களுங்காணப்பட்டன. மனிதரொருவருமே அங்

லில்லை. அவற்றை அதிசயத்துடன் பார்த்துக்கொண் டேசென்று ஒரு மணி மண்டபத்தை யடைந்தார்கள். அது மகா உன்னதமாய்ப் பார்க்கப்பார்க்க அழகுடைய தாய் விளங்கியது. அதில் நடுவிலே ஓர் அறையிருந் தது. அதன் கதவு இரண்டு மூன்று பூட்டுப்போட்டு பூட்டப்பட்டிருந்தது. அதைக்கண்டு வியப்புற்றமூவரும் அதனருகேசென்று அதிலிருந்தஒரு சிறுதுவாரத்தின் வழியே பார்த்தனர்; அவ்வறைக்குள்ளே ஒருமனிதன் உட்கார்ந்திருக்கக்கண்டு அவனைக் கைதட்டி இரண்டு மூன்றுமுறை கூப்பிட்டு அழைத்தார்கள். அந்த மனி தன் சிலைபோல் அசையாமலிருந்தான். பிறகு கத வைத்தட்டித் தட்டிக் கூப்பிட்டார்கள். அவன் அப் பொழுது திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து எழுந்து வந்து கதவைத்திறந்து மூவரையும் முன்பின் பழகின வனைப்போலப் புன்சிரிப்புடன் வரவேற்று உள்ளே யழைத்துக் கொண்டுபோனன். பாஸ்கரன், அம்மனி தனைப்பார்த்து, "இதென்ன அதிசயமான மாளிகையா யிருக்கின்றது. நீ மாத்திரமிருக்கின்றாய்! வேறொருவரை யும் காணோம். எங்கும் குத்துக்கற்களும் கல்யானைகளும் குதிரைகளுமே காணப்படுகின்றன ? இப்படியிருக்கக் காரணமென்ன ?" என்று கேட்டார்கள். அவன்வாய் பேசவில்லை; அவன் கண்கள் விழித்தபடியே யிருந்தன்; முன்உட்கார்ந்திருந்தஇடத்திலேபோய் உட்கார்ந்தான். அப்படி அவன் உட்கார்ந்ததும் ஒரு சுழல்காற்று அடித்தது. உடனே ஒரு பெரிய இருள் சூழ்ந்தது. இவர்கள் பயந்து கத்திக்கொண்டு பலபடி பிரிந்து ஓடி னர். பிறகு சற்றுநேரத்திற் கெல்லாம் காற்று நின்று இருள்பிரிந்து வெளிச்சம் தோன்றியது. மூவரும் வேறு மாளிகையிலே ஓரிடத்தில் வந்துகூடி

ஆச்சரியப்பட்டனர். அம்மாளிகையினழகும் தோற்ற மும் இவர்கள் மனத்தைக் கவர்ந்தன. எங்குப் பார்த் தாலும் பலவகையான சித்திரங்களும் உயிருள்ளவை போன்ற பலவகைப் பதுமைகளும் காணப்பட்டன. அநேகஅறைகளும்அநேக கூடங்களுமிருந்தன. அவற் றையெல்லாம் பார்த்துக்கொண்டு நெடுகச்சுற்றினர். அப் பொழுது அவர்கள் பளிங்கினாலே படிக்கட்டுகளமைக் கப்பட்ட ஒரு சிறு குளத்தைக்கண்டு அதிலிறங்கி நீந் திவிளையாடிக் கரையேறி வஸ்திர முலர்த்தி உடுத்துக் கொண்டு அதன் அழகைப் பார்த்துக்களித்து அதன் கரைவழியே கொஞ்சதூரஞ் சென்றார்கள். அங்கு ஒரு மண்டபமிருக்கக்கண்டு அதனுள் நுழைந்துபார்த் தார்கள். அங்கு மூன்று இலையில் திவ்ய போஜனம் பறிமாறியிருக்கக்கண்டு சந்தோஷத்துடனும் ஆச்சரி யத்துடனும் உட்கார்ந்து போஜனமருந்தி யெழுந்தார் கள். அவர்களுக்கு முன்னிருந்த சுவரிலே ஏதோ எழுதியிருந்தது. அதைக்கண்டதும் பாஸ்கரன் ஆவ லோடு படித்தான்.

1—அடுத்த காட்டிலே ஒரு ராஜகுமாரத்தியி னுடைய முத்துக்களிலே ஆயிரம் ஒரு புற்றரையிலே உதிர்ந்து கிடக்கின்றன. அவற்றைக்கண் டெடுத்துக் கொண்டுவந்து கொடுப்பவன் எவனோ அவனை அந்த ராஜகுமாரத்தி விவாகஞ்செய்து கொள்வாள். அவற்றை எவன் தேடப்போகின்றானோ அவன் காலையிலே புறப் பட்டுப் பொழுதுபோவதற்கு முன்பே ஆயிர முத்துக் களுடன் வந்துசேரவேண்டும். அம்முத்துக்களிலே ஒன்று குறைந்தாலும் அவன் கல்லாய் மாறிவிடுவான்- என்றிருந்தது. இதைப்படித்து முடித்ததும், மூத்த

வன் "நான் போய்க் கொண்டு வருகின்றேன்; நான்போய்க் கொண்டுவருகின்றேன்" என்று குதித்தான். இரண்டாமவனும் அப்படியே அவசரப்பட்டான். பாஸ்கரன், " அவசரப்படாதீர்கள்! அவசரப் பட்டால் காரியங் கைகூடாது; நிதானித்துப் பார்த்து அங்கே செல்ல வழிகண்டு பிடிப்போம்" என்றான். இருவரும் ஒத்துக்கொண்டார்கள். பிறகு பாஸ்கரன், இது இப்படியிங்கே எழுதப்பட்டிருக்கின்றபடியால் அங்கேக வழியும் குறிப்பிடப்பட்டிருக்குமென்று எண்ணிச் சுற்றிலும் பார்த்தான். இன்னொரு பக்கத்துச் சுவரிலே ஏதோ எழுதியிருக்கக் கண்டு அதை வாசித்தான்—

2. முத்துக்கள் உதிர்ந்து கிடக்கும் காட்டுக்கப்பால் ஓர் ஏரியிருக்கின்றது. அதிலே ஒரு திறவுகோல் கிடக்கின்றது. அந்தத் திறவுகோலைக் கொண்டுவந்துதான் ராஜகுமாரத்திகளிருக்கும் அறையைத் திறக்க வேண்டும்—என்றிருந்தது. அதுகண்டு வியந்து அதன் கீழே பார்த்தான்.

3. மூன்று ராஜகுமாரத்திகளும் சிறிதும் பேதமில்லாதவர்கள். அவர்களில் கடைசிப் பெண்ணைக் கண்டு பிடித்து எழுப்பினால் பின்பு எல்லோருக்கும் நன்மையுண்டாகும்" என்றிருந்தது.

இதைப் படித்ததும் மூவரும் ஆச்சரியப்பட்டார்கள்; காட்டிற்கேகு வழியெதுவோ தெரியவில்லையே யென்று தயங்கி நின்றார்கள். இப்பொழுது அங்கு முன் இவர்கள் பார்த்த மனிதன் வந்து நின்றான். அவனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு அவனை யழைத்துப் பேசினார்கள். அவன் வாய்திறவாமல் கை

ஜாடையினாலும்கண்களின்சைகைகளினாலும் அவர்களை ஓரிடத்திற் கழைத்துப்போய் ஒரு கதவைக் காட்டினான்.

4. இந்தக் குமிழைப் பிடித்தழுத்தினால் கதவு திறக்கப்படும். அவ்வழியே சென்றால் முத்துக்களிருக்கும் காட்டிற்குச் செல்லலாம்" என்று எழுதியிருந்தது.

அதைப் படித்ததும் மூத்தவன் அவசரப்பட்டு அழுத்தினான். கதவு திறந்தது. அவ்வழியே சென்றான். இப்பொழுது, வாய்பேசாத மனிதன் மறைந்துவிட்டான். அவன் மறைந்த வளவில் இரண்டாமவனும் அவசரப்பட்டு "நானும் போவேன்" என்று அவ்வழியே நுழைந்தான். பாஸ்கரன், அவனைத்தடுத்து, "இரு, அண்ணாவின் வரவை யறிந்து கொண்டு செல்வோம்! யாரேனும்போய்க் காரியசித்தி பெறவேண்டியது! ஏன் அவசரப்படுகின்றாய்?" என்று கூறினான். அவன் கேளாமல் பாஸ்கரனை மீறிக்கொண்டு சென்றான். பாஸ்கரன் அவர்கள் வருகையை எதிர்பார்த்தவனாய் அன்று அஸ்தமிக்கும் வரையில் காத்துக் கொண்டிருந்தான். அவர்களிருவரும் நூறுமுத்துக்களுக்கும் குறைவாகவே பொறுக்கிக்கொண்டு திரும்பிவந்து தம்பியைக் கண்டார்கள்; கண்டவுடன் அப்படியே கல்லாய் மாறிவிட்டார்கள்.

அதைக்கண்டதும் பாஸ்கரன் பெரும் பீதியடைந்து "ஆ! தெய்வமே! நான் என் சகோதரர்களை மீட்டுக் கொண்டுபோகப் பட்டபாடுகளெல்லாம் வீணாய் விட்டனவே! இனி நான் எப்படி அவர்களைக் காண்பேன்? திக்கற்றவர்களுக்குத் தெய்வமே

துணையென்பார்களே! அது தவறுகுமா? ஈசா! உன்னையே நம்பினேன்?—" என்று கூறி வெகுநேரந் தூக்கித்துக் களைப்பினாலே நித்திரைபோய்விட்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. பாஸ்கரன் தன் குலதெய்வத்தைத் தொழுதுகொண்டே யெழுந்து என்னசெய்வதென்று தோன்றாமல் இங்குமங்கும் போய்க்கொண்டு பலபல விதமாக எண்ணிக்கொண்டிருந்தான். ஒருவருமில்லாத அந்த இடத்திலிருப்பது அவனுக்குப் பெரும் பயமா யிருந்தது. அதனால் அவன் கண்களில் நீர்பெருக நின்று "தெய்வமே! என்னைக் காப்பவர் உன்னையன்றி யாரிருக்கின்றார்" என்றுகூறி யழுதான். அப்பொழுது, "நீ இந்த வாயிற்படி வழியே செல்; உனக்குக் காரியசித்தியுண்டாகும்" என்னும் அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதைக் கேட்டதும் பாஸ்கரன் மகிழ்ந்து அந்த வாயிற்படியில் நுழைந்து அங்குச் சென்ற வழியிலே சென்றான். அது அவனை முத்துக்கள் கிடக்கும் அரண்யத்திலே கொண்டுவந்து விட்டது.

முத்துக்களைக் கண்டதும் இவற்றை எப்படி அஸ்தமிப்பதற்குள் பொறுக்குவதென்று கருதித் தூக்கித்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அங்கே முன் இவனால் காப்பாற்றப்பட்ட எறும்புகள் தங்களுக்கு அவன் செய்த நன்றியை மறவாமல் வந்து அம்முத்துக்களை யெல்லாம் பொறுக்கிக் கும்பலாய்க்கொண்டுவந்து ஓரிடத்திற் சேர்த்தன. அவன் பெருமகிழ்ச்சியுடன் அம்முத்துக்களை யெடுத்துக் கொண்டு முன் தான் பார்த்த ஏரியை நோக்கி நடந்து சற்றுநேரத்திற் கெல்லாம் அதை யடைந்தான். அதிலிருந்து திறவுகோலை

யெடுப்பதெப்படி யென்று தயங்கினுன்; உடனே தான் முன் காப்பாற்றிய வாத்துக்களை அங்கே கண்டான். அவைகள் அவனைக் கண்டதும் வரவேற்பதுபோல் இரண்டு முறை கத்திவிட்டு நீரில் மூழ்கித் திறவு கோலுடன் வெளியேவந்தன. அதை வாத்துக்களிட மிருந்து பெற்றுக்கொண்டு தான் வந்த வழியேபோய் மாளிகையை யடைந்து ஸ்திரீகளிருக்கும் அறை எது என்று தேடினுன். அங்கு வாய்பேசாதவன் வந்து தோன்றிப் பாஸ்கரனை அழைத்துப்போய் ஓர் அறையைக் காட்டினுன். அதைப் பாஸ்கரன், திறந்து உள்ளே சென்றதும் கதவு மூடிக்கொண்டது. அங்கே மூன்று ராஜகுமாரத்திகளும் படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கக்கண்டான். அவர்கள் மூவரும் ஒருவிதத் திலும் பேதமில்லாதவர்களா யிருந்தமையினுல் இவர் களுள் கடைசிப் பெண்ணை எப்படிக்கண்டறிவதெனத் தயங்கினுன்; நாலாபக்கமும் பார்த்தான்; அங்கு அவர் கள் தலைக்குநேரே சுவரில், இம்மூவரும் படுப்பதற்கு முன்னே, மூத்தவள் ஒரு கட்டி கற்கண்டும், நடுப் பெண் கொஞ்சம் பாலும், கடைப்பெண் கொஞ்சம் தேனும் உண்டுவிட்டுப் படுத்தனர் என்று வரைந்திருந் தது. இதைக் கண்டும் அவன், கடைசிப்பெண்ணைக் கண்டுகொள்ள முயலாமல் "ஆ! இவ்வளவு தூரம் சித்தியடைந்தும் இதைக் கண்டுகொள்ள முடியவில் லையே" என்றெண்ணிவருத்தமுற்றுக் கண்களிலிருந்து நீர்த் துளிகளைச் சிந்தினுன்.

இப்பொழுது இவன் செவியில் ஒருதேனீ கத்தும் சப்தம் கேட்டது. உடனே கண்களை விழித்துப் பார்த்தான். முன் இவனுல் சோலையிலே காப்பாற் றப்பட்ட தேனீக்களிலே தலைமையான ஈ பறக்கக்

கண்டு ஆச்சர்யப்பட்டான். அந்த ஈ முதலிவிரண்டு பெண்களுடைய கடைசிப்பெண்ணின் வாயிலேபோ யுட்கார்ந்தது. அதனால் இளையவன் கடைசி ராஜ குமாரத்தியிவள்தானெனக் கண்டுகொண்டான். இப் பொழுது ஒருமணிச்சத்தம் கணகணவென்று ஒலித் தது. உடனே மூவரும் நித்திரை நீங்கி யெழுந்தார்கள். அந்த ராஜகுமாரத்திகளுள் மூத்தவள், பாஸ்கரனை நோக்கி, "வீரனே! நீ எப்படி இங்கே வந்து எங்களை யெழுப்பினாய்?" என்று கேட்டாள். பாஸ்கரன் நடந்த தைக்கூறினான். இதைக் கேட்டதும் அப்பெண்மணி, "எங்களுக்கெல்லாம் நீதான் தெய்வம்! நீ வந்திராவிட் டால் நாங்கள் எக்கதியாயிருப்போமோ அறியோம். இதெல்லாம் ஒரு மாயாவியினுடைய செய்கை. நீ முத லிலே பார்த்தமனிதன் எங்கள் அரண்மனை விதூஷகன். நாங்கள் மாளவதேச மன்னனுடைய புத்திரிகள். நாங் கள் இங்கே வந்து மூன்று வருஷமாகிறது. நாங்கள் ஒரு நாள் எங்களரண்மனை உபவனத்திலே மலர்கொய்து கொண்டிருந்தோம். விதூஷகரும் அங்கொருபால் வந்துலாவிக்கொண்டிருந்தனர். எங்களை இந்த மாயாவி ஒரு கிழ ஸந்நியாஸியைப் போல வந்து பல பேச்சுப் பேசிக்கொண்டிருந்து இங்கே கொண்டுவந்து விட் டான். கொண்டுவந்த நாள்முதல் எங்களை நல்ல ஆகாரங் கொடுத்துப் போஷித்து வருகின்றான். எங்கள் விதூ ஷகரையுங் கொண்டுவந்து ஊமையாக்கி விட்டான். அவர்தாம் உங்களுக்குக் கை ஜாடைகாட்டி எங்களிருப் பிடமறியும்படி செய்தார். சுவரிலே எழுதியிருந்த வைகளைப் படித்து முத்துக்களையெல்லாம் பொறுக்க முடியாமல் கல்லாய்ப் போயிருக்கிறார்கள். அந்த மாயா வியின் மாய்கையினாலே நாங்கள்பகலிலெல்லாம்இங்கே

கிடந்து தூங்குவதும் இரவிலே சஞ்சரிப்பதுமாயிருப்போம். இரவெல்லாம் இம்மாளிகையில் ஏராளமான விளக்குகள் எரியுமாதலால் பகல்போலவே இருக்கும். மாயாவி ஒரு வாரத்திற் கொருதரந்தான் இங்கே வருவான். இன்று அவன் வருவதற்குரிய நாள். இனிநாமிங்கிருந்து வெளிப்படுவதற்கு வழிதேடவேண்டும். விதூஷகர் எப்படியானாரோ தெரியவில்லை" என்றாள்.

பாஸ்கரன், கேட்டு ஆச்சரியப்பட்டு, சற்று யோசித்துப் பின், "நாம் வெளியே போய்விட வழியிருக்கிறது. பெண்களே என்னை உங்கள் விதூஷகரிருக்கும் மாளிகைக்குக் கொண்டுபோய் விடுங்கள். நான் வழி காட்டுகின்றேன்" என்றான். பெண்கள் அங்கு அழைத்துச் சென்றனர். அங்கே விதூஷகனும் அவனுக்குச் சமீபத்திலே மாயாவியும் நிற்கக் கண்டார்கள். பெண்கள் மாயாவியைப் பாஸ்கரனுக்குக் காட்டினார்கள். பாஸ்கரனுடனே அப்பெண்களுடன் ஒருபக்கம் மறைந்துகொண்டு, "ராஜகுமாரத்திகளே! இவனைக் கொல்லவேண்டும். கொன்றாலன்றி நாம் தப்ப வழியில்லை. அதற்கோர் உபாயஞ் செய்கிறேன். நீங்கள்போய் அவனுடன் பேசிக்கொண்டிருங்கள். அவன் நீங்கள் பகலிலே எழுந்து வந்ததுகண்டு வியந்து உங்களை விசாரிப்பான். நீங்கள் "எங்களுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை யெழுந்தோம்" என்று சொல்லுங்கள். நான் அவனுக்குப் பின்புறமாகவந்து அவனை என் கைக்கத்தியால் குத்திக்கொன்று விடுகின்றேன். என்று கூறியனுப்பினான். அவர்கள் அப்படியே சென்று மாயாவின் முன்னிற்க, மாயாவி, வியப்புடன் அவர்கள் எழுந்ததன் விவரம் கேட்டுக் கொண்டிருந்தான். பாஸ்கரன், சமயம்பார்த்து வேங்கைபோல் பாய்

ந்து மாயாவியின் கழுத்தைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி மார்பிலே கத்தியைப் பாய்ச்சினுன். மாயாவி, ஒரு சப்தமிட்டலறிக்கொண்டு உயிர்துறந்தான். பாஸ்கரன் அவனுடையை அங்கியைப்பரிசோதித்தான். அதிலொருசெப்புத்தகடு அகப்பட்டது. அதைப்படித்தான். படித்ததும் கல்லாய் யிருந்தவர்களனைவரும் எழுந்தார்கள். விதூஷகனும் வாய்திறந்து பேசினுன். எல்லோரும் பாஸ்கரனை வாழ்த்தினுர்கள். பாஸ்கரன் அண்ணன் மார்களையும் அந்தக் கூட்டத்திலே கண்டு சந்தோஷித்தான். பிறகு அந்த மந்திரத்தை இன்னெருதரம் படித்தான். யாவரும் பாஸ்கரன் முதலிலே பார்த்த மலையடிவாரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கிருந்து யாவரும் பாஸ்கரனிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தம் ஊருக்குச் சென்றுர்கள். பாஸ்கரன் தன் அண்ணன்மார்களுடனும் ராஜகுமாரத்திகளுடனும் விதூஷகனுடனும் மாளவதேசம்போய் அத்தேயத்து மன்னனை வணங்கி நின்றுன். மன்னன் அவர்களெல்லோரையும் கண்டு என்றுமடையாத ஆநந்தமடைந்து அவர்களை வற்புறுத்தித் தன் புத்திரிகள் மூவரையும் அவர்கள் மூவருக்கும் மணஞ்செய்து கொடுத்து ஏராளமான ஸ்திரீதனங்களுடன் அவர்களை அவர்கள் சொந்த தேசத்திற்கு அனுப்பிக்கொடுத்தான். பாஸ்கரனுடைய பேர் எங்கும் பரவியது. அவன் தன் தேசம் சென்றும் தன் தாய் தந்தையரை வணங்கி ஆசீர்வாதம் பெற்று அண்ணன்மார்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

கர்நாடக யோகினிக்கதை இரண்டாம் பாகம்

முற்றிற்று.

## சிறுவர் சிறுமியர் அறிவை அபிவிருத்தி செய்யும் சில சிறந்த புத்தகங்கள்.

---

பிரஹ்மஸ்ரீ வரகவி.

திரு. அ. சுப்ரமண்யபாரதியாரியற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| 1. | Jatavallabar—(ஜடாவல்லவர்) A High class Social Novel. Abridged School Edition, 1 4 0 Guilt Calico ... | 1 | 8 |
| 2. | Savitri or the Ideal wife (ஸாவித்திரி) வசனம் | 0 | 4 |
| 3. | Chandirahasan (சந்திரகாசன் 'கெடுவான் கேடு நினைப்பான்') ... | 0 | 2 |
| 4 | Mariyadairaman or the Boy Judge மரியாதைராமன் (ட்ராமா) ... | 0 | 3 |
| 5. | Madalasa மதாலஸா ... | 0 | 3 |
| 6. | Bharata the Ideal Brother, A Literary Drama பரதன் or கடமையின் மேன்மை 0 10 0 Guilt Calico ... | 1 | 0 |
| 7. | Bharata the Dutiful பரதன்—வசனம், 5th Edn. | 0 | 5 |

*Books Edited by V. T. A. Subramanya Bharati*

| | | | |
|---|---|---|---|
| 8. | Knowledge is Power (புத்திமானே பலவான்) 4th Edn. ... | 0 | 8 |
| 9. | Carnatic Fairy Tales 4th Edn (கர்நாடக யோகினிக்கதை No. 1. ... | 0 | 5 |
| | ,, No. 2. ... | 0 | 5 |
| 10. | Srimathi, Bhakthichandrika No 1. 3rd Edn. ஸ்ரீமதி | 0 | 1½ |

800 009

SRI BALASUBRAMNYAM & Co.,

*Royapettah P. O. Madras.*